


21.01.2025 - செவ்வாய்க்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 74 குரோதி வருடம் தை மாதம் 08 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 22 பக்கங்கள் - 12







படங்கள்: உருத்திரா



படங்கள்: எம்.ஏ.ரமீஸ்

ஒருவர் உயிரிழப்பு

# சீரற்ற காலநிலை: 17,000 பேர் பாதிப்பு

( எஸ்.டொரின் )

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் சனிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக நாடளாவிய ரீதியில், ( நேற்று மாலை 6 மணிவரை) ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் 5738 குடும்பங்களைச் சேர்ந்த 16,930 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இடர்முகாமை த்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும், உன்னிச்சைக் குளத்தின் மூன்று வான் கதவுகள் 9 அடிக்கு திறக்கப்பட்டதையடுத்து அந்தப் பகுதியிலுள்ள வேளாண்மைகள் யாவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் தாழ் நில பகுதிகளிலுள்ளகுடியிருப்புக்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், வடமாகாணத்தை பொருத்தவரையில், 491 குடும்பங்களைச் சேர்ந்த 1496 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வடமத்திய மாகாணத்தை பொருத்த வரை 356 குடும்பங்களைச் சேர்ந்த 93 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவமத்திய நிலையம் தெரிவித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் 5080 குடும்ப ங்களைச் சேர்ந்த 14,806 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நுவரெலியா (தொடர்ச்சி..) 02

## அம்பாறை :4777 குடும்பங்கள் பாதிப்பு: 2000 ஏக்கர் நெல் வயல் நீரில் மூழ்கியது

### அம்பாறை-கண்டி வீதி போக்குவரத்து வழமைக்கு

(எம்.ஏ.றமீஸ், முகமட் முக்தார் )

ஒலுவில் வீரயடிப் பிரிவில் செய்கை பண்ணப்பட்ட சுமார் 4000 ஏக்கர் நெற் காணிகளில் சுமார் 2000 ஏக்கர் விவசாயச் செய்கை முற்றாக நீரில் மூழ்கியுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் அதி காரி தெரித்தார். (தொடர்ச்சி...) 02

## ரயில் ஈ டிக்கெட் மோசடி; உடன் விசாரணைக்கு சி.ஐ.டிக்கு உத்தரவு

(கனூஷியா புஷ்பகுமார்)

இலங்கை ரயில்வே மற்றும் ஸ்ரீலங்கா டெலிகொம் இணைந்து நடத்தும் இணையவழி ரயில் ஆசன முன்பதிவு செயல்முறையில் ஒருகுறிப்பிட்ட குழுரயில் டிக்கெட்டுகளை உடனடியாக வாங்கி ஏனையவர்களுக்கு அதிகவிலைக்கு விற்பனை செய்யும் மோசடி தொடர்பான உண்மைகளை நீதிமன்றத்தில் முன்வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி உத்தரவிட்டுள்ளார். குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு நேற்று (20) குறித்த உத்தரவு (தொடர்ச்சி.) 02

## இந்தியாவுடன் உறவை பேணி நாட்டை பலப்படுத்த திட்டம்

### அரிசி இருப்பை பேண அரசாங்கம் உறுதி



இந்தியாவுடன் பலமான உறவை கட்டியெழுப்பி எமது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஹொரணையில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபொதுக்கூட்டமொன்றில்உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.அவர் மேலும் தெரிவித்தாவது,

உலக பொருளாதாரம் வேகமாக வளர்ந்துவருகிறது. அதனால்உலகநாடுகளுடன் பலமான இராஜதந்திர உறவுகளை நாம் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. இந்தியா எமக்கு அருகில் உள்ள வளர்ந்து வரும் பலமான பொருளாதாரத்தை கொண்டநாடு. அதனால் இந்தியாவுடன் நாம்பல மான இராஜதந்திர உறவை பேண வேண்டும். (தொடர்ச்சி.) 02

## மின் கட்டண குறைப்பு: நிதியமைச்சே தீர்மானிக்கும்

(கனூஷியா புஷ்பகுமார்)

நிதி அமைச்சின் பரிந்துரையின்படியே மின்கட்டண நிவாரணத்தை மக்களுக்கு வழங்குவது தீர்மானிக்கப்படும் என இலங்கை மின்சார சபையின் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். பிரதான சிங்கள பத்திரிகையொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் (தொடர்ச்சி.) 02

## முன்னாள் அமைச்சருக்கு பிணை

சட்டவிரோதமாக பொருத்தப்பட்ட வாகனமொன்றை பயன்படுத்தியதாகக் கூறி கைதுசெய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று(20) காலை பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவருக்கு 200,000 (தொடர்ச்சி.) 02

## மழைக் காலநிலை இன்றும் தொடரும்

நாட்டில் வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் மழை நிலைமை மேலும் தொடரும் என வளிமண்டல திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அத்திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. கிழக்கு மற்றும் ஊவா (தொடர்ச்சி.) 02

## 25,000 ரூபாய் உரமானியம் உடன் வழங்கப்பட வேண்டும்



விவசாயிகளுக்கான 25,000ரூபாய் உரமானியம் இன்னும் சரியாகவழங்கப்படவில்லை. கடந்த நாடாளுமன்ற அமர்விலும்இது குறித்து கேள்விஎழுப்பினேன். இன்னும் இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 40% மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. 25,000 ரூபாய் முழுமையான மானி யம் முறையாக வழங்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல், கல்கமுவ தேர்தல் தொகுதி அமைப்பாளர் பந்துல பண்டாரநாயக்க அண்மையில் (ஜனவரி 18) கல்கமுவ வாராந்த சந்தைத் தொகுதி வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர்சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

விதைக்கும் காலம் என்பதால் உரமானியம் உடனடியாக வழங்கப்பட வேண்டும். அன்று அழகான வார்த்தைகளைப் பயன்படுத்தி சொன்ன விடயங்கள் இன்று சாத்தியமில்லாது (தொடர்ச்சி.) 02

## காத்தான்குடி- கொழும்பு சொகுசு பஸ் சேருநுவரயில் விபத்து: 14 பேர் காயம்

(ஏ.எச்.ஏ.ஹுஸைன், கீதபொன்கலன் )

காத்தான்குடியிலிருந்து கொழும்பு நோக்கி 49பயணிகளுடன் பயணித்த சொகுசு பஸ் சேருநுவர – (தொடர்ச்சி.) 02





### மக்களை ஏமாற்றும் பிரமிட் திட்டம்:

## தடை நிறுவனங்கள் பட்டியலை வெளியிட்டது மத்திய வங்கி

தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்களை செயற்படுத்தியதாக கண்டுபிடிக்கப்பட்ட 21 நிறுவனங்களை இலங்கை மத்திய வங்கி நேற்று (20) உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 83 (c) ஐ மீறிய இந்த 21 நிறுவனங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி விசாரணைகளை நடத்தி, (தொடர்ச்சி...) 02




## இவ்வாரம் அரிசி விலை குறையும் சாத்தியம்



(கனூஷியா புஷ்பகுமார்)

எதிர்வரும் நாட்களில் நுகர்வோருக்கு குறைந்த விலையில் அரிசியை வழங்க முடியும் என சிறு மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அனுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய (தொடர்ச்சி.) 02

# நாடாளுமன்றம் இன்று கூடுகிறது

நாடாளுமன்றம் இன்று 21 முதல் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

அதற்கமைய, இன்று 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர், மு.ப. 11.30 முதல் பி.ப. 5.30 வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் "கிளீன் ஸ்ரீ லங்கா" திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெற்று, 22 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாவது நாள் விவாதத்துக்காக ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

நாளை 22 ஆம் திகதி புதன்கிழமை, மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 11.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து, மு.ப. 11.30 முதல் பி.ப. 5.30 வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் "கிளீன் ஸ்ரீ லங்கா" திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இரண்டாவது நாளாகவும் இடம்பெறும்.



## அம்பாறை...

கடந்த சில தினங்களாக பெய்த அடை மழை காரணமாகவும், சேனாநாயக்க சமுத்திரத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டு கல்ஓயா ஆற்றின் மூலம் நீர் வெளியேற்றப்பட்டமையினாலும் இப்பகுதி முற்றாக நீரில் மூழ்கி காணப்படுகின்றது.

கடந்த சில தினங்களாக அம்பாறை மாவட்டத்தில் பெய்து வந்த அடைமழை குறைவடைந்து காலநிலை சீரடைந்துள்ள போதிலும் தாழ்நிலப் பிரதேசங்கள் தற்போதும் நீரில் மூழ்கியுள்ளன. டி.எஸ். சேனநாயக்க சமுத்திரம் 110 அடியினைக் கொள்ளளவாக கொண்டுள்ள போதிலும் தற்போது 108.2 அடி நீர் நிரம்பிக் காணப்படுவதனால் செக்கனுக்கு 1176 கன அடி நீர் வெளியேற்றப்படுவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம்.றியாஸ் தெரிவித்தார்.

மழைவீழ்ச்சி குறைவடைந்து காணப்படுவதனால் நேற்றைய தினம் தடைப்பட்டிருந்த அம்பாறை–கண்டி பிரதான வீதியின் போக்குவரத்து தற்போது வழமைக்கு திரும்பியுள்ளதாகவும், தமண பிரதேச செயலகப் பிரிவில் போக்குவரத்துக்கென தடைப்பட்டிருந்த பாதகொட பிரதான வீதி மூலம் தற்போது மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி தவிர்ந்த வாகனங்கள் செல்வதற்காக திறக்கப்பட்டுள்ளதாகவும், கல்ஓயா ஆற்றை அண்டிய இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள நெய்னாகாடு குடுவில் பிரதேச பிரதான பாதையும், அட்டாளைச்சேனை அஷ்ரஃப் நகர் பிரதான பாதையும் போக்குவரத்துக்காக பயன்படுத்த முடியாமல் மூடப்பட்டுள்ளதாகவும் மாவட்ட பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக பெய்து வந்த அடை மழை காரணமாக அம்பாறை மாவட்டத்தில் 4774 குடும்பங்களைச் சேர்ந்த 13,872 பேர் பாதிக்கப்பட்டதாகவும், இரு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்ததாகவும் பாதுகாப்பான அமைவிடத்திற்கு சிலர் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அஷ்ரஃப் நகர் பிரதான கொங்றீட் பாதை உடைப்பெடுத்தது. இப்பாதைக்கு அருகில் தற்காலிகமாக கிறவல் பாதையொன்றும் அண்மையில் அமைக்கப்பட்டது. இத் தற்காலிக பாதையும் தற்போது உடைப் பெடுத்துள்ளதுடன் அப்பாதை முற்றாக நீரில் மூழ்கியுள்ளது. இதுதவிர, களியோடை ஆற்றுப் பகுதியின் சிறு பகுதியும் உடைப் பெடுத்துள்ளமையால் ஒலுவில் வீரயடிப் பிரிவு விவசாய நிலங்கள் தற்போது நீரில் மூழ்கியுள்ளன.

இதேவேளை, ஒலுவில் வீரயடிப் பகுதியில் அமையப் பெற்றுள்ள நீர் நிலையின் பிரதான 12 வான்கதவுகளும் திறக்கப்பட்டு களியோடை ஆற்றின் மூலம் நீர் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் களியோடை ஆற்றினை அண்டிய விவசாயச் செய்கைகள் நீரில் மூழ்கியுள்ளதுடன், களியோடை பாலத்தின் கீழ்ப் பகுதியின் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைந்தும் காணப்படுகின்றது.

## இவ்வாரம்...

அதன் தலைவர் யு.கே.சேமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த ஆண்டு பெரும்போக பருவத்திற்கான நெல் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில், அரசாங்கம் நெல்லுக்கான உத்தரவாத விலையை இன்னும் அறிவிக்காததால், தாம் பல பிரச்சினைகளை எதிர்கொள்வதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். பெரும்போக பருவத்தில் ஒரு கிலோ நெல்லுக்கு குறைந்தபட்சம் 140 ரூபாய் உத்தரவாத விலை அறிவிக்கப்பட வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் ஹுலன்னுகே, லாஹுகல மற்றும் சென்கமுவ பகுதிகளில் நெல் அறுவடை பணிகள் ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மக்களை...

ஆராய்ந்த பின்னரே இந்த பொது அறிவிப்பை வெளியிட்டுள்ளதாக அறிவித்துள்ளது. 21 நிறுவனங்களில் ஐந்தாவது நிறுவனத்தின் பெயர் பகிரங்கப்படுத்தப்படவில்லை என்று மத்திய வங்கி மேலும் கூறுகிறது. பிரமிட் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களை அடையாளம் கண்டுள்ள மத்திய வங்கி இந்த பட்டியலை வெளியிட்டுள்ளது.

1. டீன்ஸ் லங்கா ஹெல்த் கேர் பிரைவேட் லிமிடெட்
2. பெஸ்ட் லைஃப் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்
3. மார்க் – வோ இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்
4. வி. எம். எல். சர்வதேச தனியார் லிமிடெட்
5. (ஐந்தாவது நிறுவனம் நீதிமன்ற உத்தரவால் பகிரங்கப்படுத்தப்படவில்லை.)
6. பாஸ்ட் 3 சைக்கிள் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்
7. ஸ்டார்ட் செயின் ஆப், ஸ்போர்ட் செயின் இசட்.எஸ். இலங்கை சமூகம்
8. ஆன்மேக்ஸ் டிடி
9. எம்டிஎஃப், ஆப், MTFE. SL குழுமம், ஆவுகுநு சக்சஸ் லங்கா, எம்டிஎஃப், டி.எஸ். சி.சி. குழு
10. பாஸ்ட்வின் பிரைவேட் லிமிடெட்
11. ஃப்ருகோ ஆன்லைன் ஆப்ஃ ஃப்ருகோ ஆன்லைன் பிரைவேட் லிமிடெட்
12. ரைடு டு த்ரீ ஃபீட்ஸ் பிரைவேட் லிமிடெட்
13. கிவ்நெட்
14. எரா மிராக்கள் பிரைவேட் லிமிடெட் மற்றும் கின்னஸ் பிஸ்னஸ் ஸ்கூல்
15. லெட்ஜ் பிளாக்
16. இசிமாகா பிரைவேட் லிமிடெட்
17. பிட்காயின் செயலி மற்றும் சன்பேர்ட் அறக்கட்டளை
18. விண்டெக்ஸ் வர்த்தகம்
19. தி என்ரிச் லைஃப் பிரைவேட் லிமிடெட்
20. ஸ்மார்ட் வின் என்டபினேசர் பிரைவட் லிமிடெட்

21 நெட்ஃபீவர் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட்ஃநெட்ரிக்ஸ்

## மழைக்காலநிலை...

மாகாணங்களிலும் மாத்தளை, நுவரெலியா மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30–40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

இதேவேளை, நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30–40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50–60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

## மின்கட்டண...

ஆணைக்குழுவின் மேற்பார்வை அதிகாரம் நிதி அமைச்சரிடமே உள்ளதாகவும் அதன்படி, மின் கட்டணத்தை 20 வீதத்தால் குறைப்பது அமைச்சரின் பரிந்துரையின் கீழ் இடம்பெறும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மலிவு விலையில் மின்சாரக் கட்டணம் நிறுவப்பட வேண்டும் என மின்சார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு ஆகிய இரு நிறுவனங்களும் நிதி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் உள்ளதாக அவர் வெளிப்படுத்தினார்.

அனைத்து மின் நுகர்வோருக்கும் சலுகையாக மின் கட்டணமானது 20 வீதத்தால் குறைக்கப்பட்டது. கடந்த 17ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த மின் கட்டண குறைப்பு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சீரற்ற...

மாவட்டத்தில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பதுளை மாவட்டத்தில் 67 குடும்பங்களைச் சேர்ந்த 239 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மக்களுக்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

தாழ் நிலப்பகுதிகள் இரவு நேரங்களில் வெள்ளத்தால் மூழ்கும் அபாய நிலை தோன்றியுள்ளதுடன் வான்கதவு திறக்கப்பட்டுள்ளதால் ஆற்றை அண்டிய மற்றும் தாழ்நிலப் பகுதிகளிலுள்ள மக்கள் அவதானமாக இருக்குமாறும் நீர் மட்டம் அதிகரித்தால் தாழ்நில பகுதிகளிலுள்ளவர்கள் அங்கிருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும் பொதுமக்கள் குளங்கள், நீர் நிலைகள், கடல், ஆறுகளில் நீராடுவதை தவிர்க்குமாறும் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் அவதானமாகச் செயற்படுமாறும் மாவட்ட இடர் அனர்த்த முகாமைத்துவ நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

## இந்தியாவுடன்...

அதனை நாம் செய்துள்ளோம்.

சம்பூரில் இந்திய நிறுவனத்துடன் இணைந்து சூரிய ஒளி மின்சாரத்தை தயாரிக்க இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் இதன் உரிமம் இரு தரப்பினருக்கும் 50 வீதம் என்ற அடிப்படையில் கிடைக்கும். மின்சார அலகொன்று 0.59 டொலருக்கு எமக்கு கிடைக்கும். இதற்கான அமைச்சரவை அனுமதி விரைவில் அளிக் கப்படும்."

பெரும்போக அறுவடையின் பின்னர் அரிசி பற்றாக்குறை ஏற்படாமல் இருப் பதை உறுதி

செய்வதற்கான

நடவடிக்கைகளை அரசாங்கம் செயல்படுத்தியுள்ளது. உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரிசி இருப்புக்களை பராமரிப்பது முக்கியமானது.

அதேபோன்று வரவு –செலவுத் திட்டத்தில் மக்களுக்கு பல நிவாரணங்கள் கிடைக்கப்பெறும். அரசாங்க ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கும் சலுகைகள் கிடைக்கப்பெறும்.

பௌத்தாலோக்க மாவத்தையிலுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வசிக்கும் இல்லத்துக்கு மாத்திரம் 46 இலட்சம் ரூபா வாடகை செலுத்தப்பட வேண்டும் என அரச மதிப்பீட்டு திணைக்களம் மதிப்பிட்டுள்ளது. இன்னமும் அந்த வீடு அமைந்துள்ள காணி தொடர்பிலான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆட்சியாளர்கள் இவ்வாறுதான் மக்கள் பணத்தை நாசமாக்கியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகள் குறித்த சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்கு வீடு ஒன்றை வழங்க முடியும். இல்லாவிட்டால் சம்பளத்தில் மூன்றில் ஒருபகுதி உரித்தாகும். அதனால் அவரிடம் வீட்டை மீளப்பெற்றுக்கொண்டு சம்பளத்தில் மூன்றில் ஒருபகுதியான 30 ஆயிரம் ரூபாவை வழங்குவோம். இல்லாவிட்டால் மீதிப் பணத்தை அவர் செலுத்தி குறித்த வீட்டில் வாடகைக்கு இருக்க அனுமதியளிக்கப்படும். சந்திரிக்காவின் வீடு குறித்தும் மதிப்பீடு செய்யப்படும். அவர் லண்டனில் இருந்தார். தற்போது நாடு திரும்பியுள்ளதால் மதிப்பீடு செய்யப்படும்.

அமைச்சர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களை எமது அரசில் எவருக்கும் வழங்க மாட்டோம். அந்த வீடுகளுக்கு என்ன செய்வது என்பது தொடர்பில் ஆய்வை நடத்துமாறு கோரியுள்ளோம். அதன் பிரகாரம் அவை குறித்து உரிய தீர்மானங்கள் எடுக்கப்படும். முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் வீடுகளை வழங்க மாட்டோம். நானும் பெற மாட்டேன்.

அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் அமைச்சுகளில் உள்ள அதிசொகுசு வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். பெப்ரவரி மாதம் முதல் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வாகன இறக்குமதியின் பின்னர் வாகன விலைகளில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கிறோம். இதன் பின்னர் இந்த வாகனங்கள் விற்பனை செய்யப்படும். விற்பனை செய்யப்படும் நிதி திறைசேரிக்கு அனுப்பப்படும். மக்கள் பணத்தை நாசமாக்கினர். அவற்றை சரிசெய்யும் போது இப்போது அழுகின்றனர். அவர்கள் எதிர்வரும் ஒன்றரை தசாப்தங்கள் அழுதுகொண்டிருக்க வேண்டும்.

எம்.பிகளில் ஓய்வூதியத்தை இரத்துசெய்யும் சட்டம் விரைவில் கொண்டுவரப்படும். நாடாளுமன்றத்தில் உள்ள சிற்றண்டிச்சாலை தொடர்பில் கருத்தாடலொன்று உள்ளது. எதிர்காலத்தில் உணவுக்கு உரியப் பணத்தை செலுத்தி உணவை பெற்றுக்கொள்ள வேண்டும். அதனை செய்வோம். கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்த நாட்டைதான் நாம் பெற்றோம். ஆனால், மீண்டும் அப்படியொரு சூழ்நிலை நாட்டில் உருவாக இடமளிக்கமாட்டோம் என்றார்.

## காத்தான்குடி...

கந்தளாய் வீதியில் சேருநுவர இராணுவ முகாமிற்கு முன்பாக விபத்துக்குள்ளாகியதில் 14 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் ஞாயிறன்று நள்ளிரவைத் தாண்டி 12.05 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சமீப நாட்களாகப் பெய்து வரும் கன மழை வெள்ள நீரோட்டத்தினால் கொழும்பு மட்டக்களப்பு நெடுஞ்சாலையின் மன்னம்பிட்டிப் பிரதேசத்தில் ஊடறுத்துப் பாய்கிறது.

இதனால் அவ்வீதியூடாதாகப் பயணிப்பதை தவிர்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக இந்த பஸ் வழமையான மன்னம்பிட்டிப் பாதையைத் தவிர்த்து மட்டக்களப்பு – திருகோணமலை வீதியூடாக சேருநுவர கந்தளாய் மார்க்கத்தில் கொழும்பு நோக்கிப் பயணித்தபோது இந்த விபத்து சம்பவித்துள்ளது.

பெய்து கொண்டிருந்த கனமழை காரணமாக இந்த பஸ் வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதுண்டு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் சாரதி, நடத்துநர் உட்பட 14 பேர் காயமடைந்து சேருநுவர வைத்தியசாலையில் உடனடியாக அனுதிக்கப்பட்டனர்.

பின்னர் அனுமதிக்கப்பட்டவர்களில் 09 பேர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 25,000 ரூபாய்...

போயுள்ளன. பேச்சுக்கும் செயலுக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தேர்தலுக்கு முன்னர் 33% மின் கட்டணம் குறைக்கப்படும் என கூறப்பட்ட போதும், அதனை 37% அதிகரிக்க முன்மொழிந்துள்ளதாக மின்சக்தி அமைச்சர் தெரிவித்தார். 6 மாதங்களுக்கு மின் கட்டணத்தை குறைக்க முடியாது என மின்சார சபை கூறியபோது, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மக்கள் ஆலோசனைகளை பெற்று, மின் கட்டணத்தை 20% குறைத்திருக்கிறது.

தேர்தலின் போது ஒரு கதையைச் சொல்லி, இப்போது இன்னுமொரு கதையைச் சொல்லி மக்களின் பலமான கோரிக்கையைக்கூட புறக்கணிக்கும் நிலையை அரசு எட்டியுள்ளது. மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கும் தெளிவான திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. மக்களின் நலனுக்காக எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும் என்பது தெரியவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## ரயில்...

பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ரயில்வே திணைக்களம் மூலம் வழங்கப்பட்ட முறைப்பாட்டிற்கமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான காரணிகளை முன்வைத்த குற்றப் புலனாய்வு பிரிவு, ரயில்வே திணைக்களமானது மொபிடெல் நிறுவனத்துடன் இணைந்து ஒன்லைனில் டிக்கெட்டுகளை விற்பனை செய்யும் திட்டத்தை செயல்படுத்தி வருவதாக நீதிமன்றத்தில் தெரிவித்தது.

அந்த விற்பனை செயற்திட்டத்தில் ஒரு குழுவினர் குறுகிய காலத்திற்குள் ஒன்லைனில் வழங்கப்பட்ட டிக்கெட்டுகளை உடனடியாகப் பெற்று, பின்னர் அவற்றை அதிக விலைக்கு ஏனைய நபர்களுக்கு விற்றுள்ளமை தெரியவந்துள்ளதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பணம் செய்தனர்.

சம்பவம் தொடர்பாக விசாரணை அதிகாரிகளின் சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதவான், உடனடியாக விசாரணை நடத்தி அதன் உண்மைகளை நீதிமன்றத்திற்கு தெரிவிக்க உத்தரவிட்டார்.

## முன்னாள்...

ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்க உத்தரவிடப்பட்டது.

மேலும், இந்த வழக்கை பெப்ரவரி 06 திகதியன்று மீண்டும் விசாரிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கட்டுநாயக்க விமான நிலைய முனையத்தில் வெடிப்பு சம்பவம்

## மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதி





கட்டுநாயக்க விமான நிலைய முனையத்தில் நேற்று திங்கட்கிழமை (20) பிற்பகல் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளதாக விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்தில் விலங்குகள் மற்றும் பறவைகளினால் ஏற்படும் ஆபத்துக்களைக் கட்டுப்படுத்தும் கட்டுப்பாட்டுப் பிரிவினர் கட்டுநாயக்க விமான நிலைய முனையத்திற்கு அருகில் கூட்டமாகப் பறந்து திரிந்த பறவை கூட்டத்தை விரட்டுவதற்காக வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இதன்போது எதிர்பாராத விதமாகக் அவர்களின் துப்பாக்கிச் சூடு விமான நிலைய விலங்குகள் மற்றும் பறவைகளின் ஆபத்துக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் பயணித்த கெப் வாகனத்தின் மீது விழுந்து வெடித்துள்ளது. இதனால் கெப் வாகனத்திலிருந்த ஏனைய வெடிபொருட்களும் வெடித்துச் சிதறியுள்ளன. இதன்காரணமாக கெப் வாகனத்திலிருந்த மூன்று அதிகாரிகள் காயமடைந்து சிகிச்சைகாக நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் தை மாதம் 08ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**மேஷம்**: இன்று உங்களுக்கு சிறப்பான சாதகமான நாள்.

**ரிஷபம்**: இன்று மனக்குழப்பத்துடன் காணப்படுவீர்கள்.

**மிதுனம்**: இன்று வெற்றிக்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

**கடகம்**: இன்று உங்களிடம் நம்பிக்கை நிறைந்து காணப்படும்.

**சிம்மம்**: இன்று தேவையற்ற செலவுகள் அதிகமாக காணப்படும்.

**கன்னி**: இன்று பதட்டப்படாமல் சமநிலையோடு இருங்கள்.

**துலாம்**: இன்று பணத்தை கவனமாகக் கையாளுங்கள்.

**விருச்சிகம்**: கடினமான பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

**தனுசு**: இன்று மகிழ்ச்சியான நிகழ்வுகள் ஏற்படலாம்.

**மகரம்**: இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்த்திடுங்கள்.

**கும்பம்**: இன்று கவலையுடன் காணப்படுவீர்கள்.

**மீனம்**: இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று பிற்பகல் 12:43 வரை சப்தமி பின்பு அஷ்டமி.

**நட்சத்திரம்:** இன்று இரவு 11:43 வரை சித்திரை பின்பு சுவாதி.

**யோகம்:** சித்த.

**சந்திராஷ்டமம்:** பூரட்டாதி, உத்திரட்டாதி.

**சூலம்:** கிழக்கு.

**இராகு காலம்:** 03:00 PM முதல் 04:30 PM வரை.

**குளிகை:** 12:00 PM முதல் 01:30 PM வரை.

**எமகண்டம்:** 09:00 AM முதல் 10:30 AM வரை.

# கல்கிஸை துப்பாக்கி சூடு: பாதாள குழுக்களின் மோதலே காரணம்

## பொலிஸ் விசாரணையில் தகவல்

கல்கிஸையில் நேற்று முன்தினம் (19) பதிவான துப்பாக்கிச் சூட்டில் 24 வயதுடைய இளைஞன் கொல்லப்பட்ட சம்பவம், இரண்டு பாதாள குழுக்களுக்கு இடையில் நீண்டகாலமாக நிலவிவரும் தகராறின் விளைவாகும் என பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத ஆயுததாரிகள் கல்கிசை சிறிபால மாவத்தையில் இளைஞர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் காயமடைந்த அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார். உயிரிழந்தவர் தற்போது டுபாயில் பதுங்கியிருப்பதாக நம்பப்படும் பிரபல பாதாள உலக பிரமுகர் ஒருவருடன் நெருங்கிய தொடர்புடையவர் என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 47 வயதுடைய சந்தேக நபர் மற்றுமொரு பிரபல பாதாள கும்பலைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் ஹெல்மெட் என்பன கல்கிசை அத்திடிய பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய சந்தேக நபரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை கல்கிசை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

இரு பாதாள குழுக்களுக்கு இடையில் நீண்டகாலமாக நிலவி வந்த தகராறு காரணமாக துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக தெரிவித்த பொலிஸார், இரு கும்பல்களுக்கிடையிலான தகராறு காரணமாக நேற்று முன்தினம் நடந்த கொலையுடன் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளதாகவும் கூறினர்.

# யாழில் தேசிய மக்கள் சக்தி அலுவலகம் திறந்து வைப்பு





தேசிய மக்கள் சக்தியின் பொது மக்கள் தொடர்பாடல் அலுவலகம் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரனால் திறந்து வைக்கப்பட்டது. பலாலி வீதி, கந்தர்மடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# சாதாரண பயணியாக ரயிலில் பயணித்த போக்குவரத்து அமைச்சர் பிமல்



போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, சாதாரண பயணியாக ரயிலில் பயணித்த சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

நேற்று (20) காலை மொரட்டுவையில் இருந்து கொழும்பு, கோட்டை நோக்கி பயணித்த அலுவலக ரயிலிலேயே அவர் இவ்வாறு சாதாரண பயணியாக பயணித்துள்ளார்.

எந்தவொரு முன்னறிவிப்பும் இல்லாமல் நடந்த இந்தப் பயணம், பயணிகளிடமிருந்து அவருக்குப் பெரும் பாராட்டுகளைப் பெற்றது. ரயில் பயணிகளும் தங்கள் பல பிரச்சினைகளை முன்வைத்துள்ளனர்.

ஆனால், தாமதங்களுக்கு நன்கு பழக்கப்பட்ட இலங்கை ரயில்வே, நேற்று அமைச்சர் பயணிக்கவிருந்த ரயிலையும் தாமதப்படுத்தியே இயக்கியுள்ளது.

அதனால், அமைச்சர் பயணித்த ரயில் 13 நிமிட தாமதத்திற்குப் பிறகு அதன் இலக்கை அடைந்தது. அமைச்சர் பயணிகளுடன் உரையாடு வதையும், ரயிலில் பயணிகள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்து கொள்வது தொடர்பான புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

இதன்போது அடிக்கடி தொடருந்து தாமதம், மின் விசிறிகள் பழுதடைதல், மாற்றுத் திறனாளிகள் ரயிலில் ஏறும் போது ஏற்படும் சவால்கள், தண்டவாளங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் உள்ள சுகாதாரமற்ற நிலை, தொடர்ந்து பயன்படுத்துதல் போன்றவற்றைப் பற்றி பயணிகள் கவலை தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.





சம்பூர் பெரியகுளத்தை நேற்று(20) ஜப்பானிய தூதுவர் இசமட்டா அக்கியோ பார்வையிட்டார்.2022 ஆம் ஆண்டு இக்குளத்தின் புனரமைப்பு வேலைகளுக்கென ஜப்பானிய அரசாங்கம் 9.4 மில்லியன் ரூபா நிதி உதவியை இலங்கைக்கு வழங்கியிருந்தது. இக்குளத்தின் தற்போதைய நிலையை ஜப்பானிய தூதுவருடன் ஏனைய தூதரக அதிகாரிகளும் நேரில் பார்வையிட்டனர்.

(எஸ்.கீதபொன்கலன்)

# யாழில் அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் பவளவிழாவுக்கு ஏற்பாடு

(பு.கஜிந்தன்)

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் 75 ஆவது வருட நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 26ஆம் திகதி பவளவிழா மாநாடும் புத்தக வெளியீடும் பிரமாண்டமான வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நிகழ்வின் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது. இது குறித்து யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று (20) ஊடக சந்திப்பை முன்னெடுத்த ஏற்பாட்டுக் குழுவினர் மேலும் கூறுகையில்,

1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையானது பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டு பல சமூக பணிகளை குறிப்பாக வறிய மாணவர்களின் கல்வி செயற்பாடுகளை ஊக்குவித்து வந்துள்ளது. இதனால் பலன் பெற்ற பல நூறு பேர் உள்ளனர்.




இன்னிலையில் இந்த மகாசபையானது 75 ஆவது வருட நிறைவை எட்டியுள்ளது.


அதனடிப்படையில் வள்ளுவரின் வரலாற்றை வாழும் சந்ததியூடாக வரும் சந்ததிக்கு கடத்திச் செல்வதற்காக இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது.

இன்நிகழ்வில் அரசியல் தலைவர்கள், உயர் பதவி நிலை அதிகாரிகள், உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலாப்பயணியின் நிதி அட்டையை திருடி பொருட்கள் கொள்வனவு

## துரிதமாக செயற்பட்ட பொலிஸாரால் நபர் மடக்கிப்பிடிப்பு

(க.கிஷாந்தன்)





சுற்றுலாப்பயணியான பிரித்தானிய பெண்ணொருவரின் நிதி அட்டையைக் கொள்ளையடித்து ஹட்டன் நகரிலுள்ள சில வர்த்தக நிலையங்களில் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்த ஒருவரை ஹட்டன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 22 வயது நபரொருவரே இவ்வாறு நேற்று முன்தினமிரவு (19) கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டியிலிருந்து எல்ல நோக்கி சென்ற ரயிலில் பயணித்த பிரித்தானிய பெண்ணொருவரின் நிதி அட்டையை, ஹட்டன் மற்றும் தலவாக்கலை ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் வைத்தே இவர் திருடியுள்ளார்.பின்னர் ஹட்டன் நகருக்கு வந்த அந்நபர் ஹட்டன் நகரில் தங்க நகை, கைத்தொலைபேசி, ஆடை உள்ளிட்டவற்றை கொள்வனவு செய்துள்ளார்.தங்க நகையை ஹட்டனிலுள்ள தனியார் அடகு பிடிக்கும் நிலையமொன்றில் அடகு வைத்து 78 ஆயிரம் ரூபாய் பணமும் பெற்றுள்ளார்.

தனது நிதி அட்டை களவாடப்பட்டுள்ளமை தொடர்பில் எல்ல சுற்றுலாப் பொலிஸாரிடம் குறித்த பெண் முறையிட்டதையடுத்து அது தொடர்பில் ஹட்டன் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து விசாரணை வேட்டையில் இறங்கிய ஹட்டன் பொலிஸார், வாடகை வாகனமொன்றில் எல்ல நோக்கி பயணமாக தயாராகிக்கொண்டிருந்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர். களவாடிய நிதி அட்டையில் இருந்து வாங்கிய பொருட்களையும் மீட்டனர்.

பின்னர் பிரித்தானிய பெண்ணை ஹட்டன் வரவழைத்த பொலிஸார், நிதி அட்டையை அவருக்கு வழங்க நடவடிக்கை எடுத்ததோடு குறித்த நபர் கடைகளில் வாங்கிய பொருட்களை மீள ஒப்படைத்து அதற்குரிய பணமும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## எதிர்பார்ப்புகளை கைவிட்ட மனோநிலையில் மக்கள்

நாட்டில் அண்மைக் காலமாக குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

நாளாந்தம் பதிவாகும் செய்திகளில் நாடளாவிய ரீதியில் பல பிரதேசங்களில் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும், கொலை சம்பவங்களும் பதிவான வண்ணமே காணப்படுகின்றன.

இவற்றில் சில சம்பவங்களுக்கு தடயங்கள் கூட இல்லை. இதன்காரணமாக நாட்டில் மீண்டும் பாதாளக் குழுக்களின் நடவடிக்கைகள் அதிகரித்து விட்டதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

பல பிரதேசங்களில் அடையாளம் தெரியாத மர்ம நபர்களால் மேற்கொள்ளப்படும் துப்பாக்கிச் சூடுகளும், பயன்படுத்தப்படும் துப்பாக்கிகளும் சாதாரண பொது மக்கள் பயன்படுத்துவதாக தெரியவில்லை என்பதோடு துப்பாக்கிகளை பயன்படுத்தி இலக்கு வைக்கும் முறைமை கூட பாதாளக் குழுக்களின் செயற்பாடாக இருக்குமா? என சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

போதைப்பொருள் பாவனை குறைந்து விட்டதா எனக் கேட்டால் அதிலும் எந்த மாற்றங்களும் இல்லை. இன்னுமும் போதைப்பொருள் பயன்பாடு காணப்படுகிறதை செய்திகளில் பார்த்தும் கேட்டும் அறிகிறோம்.

சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அத்தியாவசியப் பொருட்களுக்கு காணப்பட்ட வரிசையானது, கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நாட்டிற்கு புதிய தலைவரை தெரிவு செய்யக்கூடிய வாய்ப்பை வழங்கியது.

காலங்காலமாக காணப்பட்ட அரசியல் கலாசாரத்தை மாற்றியமைத்து புதிய ஒரு அரசியல் கலாசாரத்தை சுமார் 56 இலட்சம் மக்கள் உருவாக்கினர். பெரும்பான்மையுடன் தற்போது ஆட்சியமைத்தும் வருகின்றனர்.

எனினும், நாட்டு மக்கள் புதிய அரசாங்கத்திடம் ஒழுக்கமான ஒரு நாட்டை எதிர்ப்பார்த்தனர். எனினும், இது வரையில் அது நடக்கவில்லை. இதனால் மக்கள் எதிப்பார்ப்புகளை கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

2025ஆம் ஆண்டு 16 நாட்களுக்குள் 5 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் நாட்டில் பதிவாகியுள்ளதுடன் பாதாள உலகக் குழுக்களின் தலையீடு இவற்றில் அதிகமாக உள்ளமை தெரியவருகிறது.

கடந்த காலங்களில் பாதாள உலகக் குழு செயற்பாடுகள் ஓரளவுக்கு குறைவடைந்து காணப்பட்டாலும் கூட இவ்வாண்டில் அது அதிகரித்துள்ளதை அறியக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு பாதாள உலகக் குழுக்களின் தலையீடு அதிகமாக காணப்படுவதை சாதாரண ஒரு விடயமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. சாதாரண மக்களின் வாழ்க்கை பாதிப்படைவதே அதற்கான காரணமும் ஆகும்.

இவ்வாறு பாதாள குழுக்களின் செயற்பாடுகள் காரணமாக பொதுமக்களால் சுதந்திரமாக பொதுவெளியில் நடமாட முடியாத சூழல் உருவாகியுள்ளதுடன் மக்கள் பெரும் அச்சத்துடன் தமது நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாக உள்ளது.

புதிய அரசாங்கம் நியமிக்கப்பட்டதிலிருந்து மக்கள் அரிசியை விலை கொடுத்து வாங்குவதற்காக வீதி வீதியாக சென்று ஒவ்வொரு கடைகளில் ஏறி இறங்கி வருகின்றனர்.

நத்தார், புது வருட பிறப்பு, தைப்பொங்கல் ஆகிய பண்டிகைகளை மக்கள் போதிய அரிசி இன்றி கொண்டாட வேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளியது.

ஆக, நிம்மதியாக உண்டு வாழ முடியாத மற்றும் தனிமனித சுதந்திரத்தை அச்சுறுத்தும் ஒரு நாடாக இலங்கை மாறி விட்டதா? என்றொரு அச்சம் தற்போது மக்கள் மத்தியில் எழுந்து விட்டது.

பெறுமதியான வாக்குகளை வழங்க வாக்குச்சாவடிகளில் வரிசையில் நிற்கும் போது மக்கள் சுமந்துக் கொண்டிருந்த அத்தனை எதிர்ப்பார்ப்புகளும் தூளாகி விட்டன.

கடந்த ஒவ்வொரு தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களிலும் இவ்வாறு பொதுமக்களின் எதிர்ப்பார்ப்புகள் தூளாக்கப்பட்டதே நடந்து வந்தது.

எனினும், அரசாங்கம் இவை எதுவும் அறியாதவர்கள் போல இருப்பது ஏன்? என்றொரு கேள்வியும் எழுகிறது.

அரிசி நெருக்கடிக்கு தீர்வாக எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாத அநுர அரசாங்கம், வெறும் வாய் வார்ததைகளால் மாத்திரம் மார்தட்டி வருகிறது.

அரசாங்கமாக பதவியேற்று மூன்று மாதங்கள் தாண்டிய போதிலும் இன்னும் எதிர்க்கட்சிகளைப் போல கடந்த அரசாங்கம் மீது குற்றம் சுமத்தி வருகிறது தற்போதைய அரசாங்கம்.

இந்நிலை மாற வேண்டும், தலைதூக்கியிருக்கும் பாதாளக் குழு செயற்பாடுகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும்.

கிளீன் ஸ்ரீலங்கா எனும் பெயரில் சிறு சிறு விடயங்களில் அவதானம் செலுத்தி பாரதூரமான பிரச்சினைகளை அரங்கேற விடுவது அரசாங்கத்திற்கு நல்லதல்ல. வீதி விபத்துக்களால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது மகிழ்ச்சியான செய்தியாக இருந்தாலும் பாதாள உலகக் குழு செயற்பாடுகளால் பல அப்பாவி உயிர்கள் பறிபோகின்றன. அரிசிக்காக மக்கள் அவதிப்படுகின்றனர்.

இலங்கை மக்களின் அபிலாஷைகளை அடிப்படையாகக் கொண்டமைந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், உண்மையிலேயே மக்கள் அபிலாஷைகளை பூரணப்படுத்துகின்றதா? இது வரையில் இல்லை. மக்களின் மனநிலையும் எதிர்ப்பார்ப்புகளை கைவிட்டதாகவே தெரிகிறது.

# 114 நாள் ஆட்சியில் அரசு சாதித்தது என்ன..?

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க வெற்றிபெற்ற பின்னர் 2025 ஜனவரி 14 ஆம் திகதியளவில் கழிந்த 114 நாட்கள் காலப்பகுதியில் நிகழ்கால தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களுக்கு அளித்த அரசியல், கலாசார, சமூக மற்றும் பொருளாதார வெற்றி பற்றி தேசிய மக்கள் சக்தி பட்டியலிட்டு விளக்கம் அளித்துள்ளது. அதனை அப்படியே தருகிறோம்..

01. ஜனாதிபதி வெற்றிபெற்ற பின்னர் நடைபெற்ற உறுதிப்பிரமாணம் செய்கின்ற வைபவம் பண விரயத்திற்கு முற்றுப்புள்ளிவைத்து மிகவும் எளிமையாகவே நடைபெற்றது. அது அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கின்ற திருப்பு முனையாகும்.
02. ஒரு ஜனாதிபதி என்றவகையில் பரிவார சேனைகள் புடைசூழ வாகன ஊர்வலம், எண்ணிலடங்கா பாதுகாப்பு படையினரை ஈடுபடுத்தி பயணிப்பதை நிறுத்தி அந்த பணத்தை சேமித்தமை. அதுவும் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைத்த பிரதான தருணமாகும்.
03. ஜனாதிபதி வீதியில் பயணிக்கையில் மக்களுக்கு ஏற்படுகின்ற இடையூறுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தமை. அதுவும் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைத்த பிரதான தருணமாகும்.
04. மூன்று அமைச்சர்களை உள்ளடக்கிய உலகின் மிகச்சிறிய அமைச்சரவையை நியமித்து அரசாங்கத்தை பேணிவந்தமை.
05. கமக்காரர்களுக்கு வழங்கிய 15,000 ரூபா உரமானியத்தை 25,000 ரூபா வரை அதிகரித்தமை.
06. ஓய்வூதியத்தை 3,000 ரூபாவினால் அதிகரித்தமை.
07. STF மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் நிலுவை பட்டா கொடுப்பனவினை செலுத்தியமை (ஏறக்குறைய 30,000 ரூபா வரை)
08. மீனவர்களுக்காக எரிபொருள் மானியத்தை வழங்கியமை.
09. ஏக்கரொன்றுக்கு 12.5 கிலோ வீதம் MOP உரத்தை இலவசமாக வழங்குதல்.
10. நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியே இடைக்கால அரசாங்கத்தை நடாத்தி வந்ததோடு அதனூடாக எவ்விதத்திலும் அரச சொத்துக்களையும் அரசியல் பதவிகளையும் தேர்தலுக்காக பாவிக்காமை. அதுவும் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைத்த பிரதான தருணமாகும்.
11. 24 அமைச்சுக்களுக்காக 21 அமைச்சர்களைக்கொண்ட செலவு குறைந்த எளிமையான அமைச்சரவையை நியமித்தமை. அதுவும் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைத்த பிரதான தருணமாகும்.
12. 24 அமைச்சுக்களுக்காக 29 பிரதியமைச்சர்களை நியமித்ததோடு அதனையும் மிகவும் எளிமையாக மேற்கொண்டமை.
13. இந்நாட்டுக்கு முதலீட்டாளர்களின் வருகையை குறிக்கும் முகமாக அமெரிக்காவின் முதன்மை பாதுகாப்பு துணைச்சாதன உற்பத்திக் கம்பனியொன்று வத்துபிட்டி வெல ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தில் தனது தொழிற்சாலையை நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டியமை.
14. எப்பாவல பொஸ்பேற் படிவைப் பன்படுத்தி உரத்தை உற்பத்தி செய்கின்ற சவால் நிறைந்த செயற்பாட்டினை ஆரம்பித்துள்ளமை.
15. நியூ லைஃப் பயோ ரெக் தனியார் கம்பெனியின் ஒளடத உற்பத்தியகமொன்றை ஒயாமடுவ சுவசிறிபுர கைத்தொழில் வலயத்தில் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டியமை.
16. உழைக்கும்போதே செலுத்துகின்ற வரியை அறவிடுகின்ற எல்லையை 100,000 ரூபாவில் இருந்து 150,000 ரூபாவாக உயர்த்தியமை.
17. அஸ்வெசும கொடுப்பனவினை அதிகரித்தமை.
18. அஸ்வெசும உரிமை பெறுகின்ற குடும்பங்களையும் உள்ளிட்டதாக குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலைப் பிள்ளைகளுக்காக ஒரு பிள்ளைக்கு 6,000 ரூபா வீதம் கொடுப்பனவினை வழங்குதல்.
19. அஸ்வெசும செலுத்தப்படுகின்ற காலத்தை நீடித்தல்.
20. ஒரு லீற்றர் லங்கா சுப்பர் டீசலை 39 ரூபாவினால், ஒரு லீற்றர் லங்கா ஒட்டோ டீசலை 21 ரூபாவினால், ஒரு லீற்றர் ஒக்டேன் 92 பெற்றோலை 23 ரூபாவினால் அத்துடன் ஒரு லீற்றர் ஒக்டேன் 95 பெற்றோலை 06 ரூபாவினாலும் குறைத்துள்ளமை.
21. சரிந்துகொண்டிருந்த பங்குச் சந்தையினை மீண்டும் முனைப்பான மட்டத்திற்கு கொண்டுவந்தமை மற்றும் இன்றளவில் இற்றைவரை இலங்கை வரலாற்றில் நாளுக்கான மிக அதிகமான பங்கு விலைச் சுட்டெண் பெறுமானம் அண்மையில் பதிவாகியமை. இலங்கையின் பங்குச் சந்தை தெற்காசியாவின் மிகச்சிறந்த முனைப்பாக இயங்கிவருகின்ற பங்குச் சந்தைகள் மத்தியில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளமை.
22. மூடப்பட்டுள்ள சதொச, கூட்டுறவு மற்றும் அரசாங்கத்தின் ஏனைய அரிசியாலைகளை மறுசீரமைத்து இயல்புநிலைக்கு கொண்டுவருவதற்கான இயலுமையை கண்டறிதல். அப்பணிகளை ஆரம்பித்தமை.
23. கைவிடப்பட்டுள்ள நெற்களஞ்சியங்களை மறுசீரமைத்து எதிர்காலத்தில் நெல்லைக் களஞ்சியப்படுத்தக்கூடிய மட்டத்திற்கு மாற்றியமைக்கத் தொடங்குதல்.
24. விற்பனைக்காக போடப்பட்டுள்ள சதொசவை மீண்டும் முனைப்பானதாக இயக்கி அரிசித் தட்டுப்பாட்டினால் மக்கள் படுகின்ற அவஸ்தயை போக்கி அரிசியை விநியோகித்தல்.
25. மதிப்பிறங்கியுள்ள ரூபாவை பலப்படுத்தி ஒரு டொலருக்கு 295 ரூபா வரை கொண்டுவருதல்.
26. ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட பிரமுகர்களின் பதவியணிக்காக உறவினர்களை ஈடுபடுத்தாமை.
27. அரசாங்கத் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் திருட்டு, ஊழல், மோசடிகளில் பங்கேற்காமை.
28. அமைச்சர்களுக்கும் குடும்பத்தின் பிள்ளைகளுக்கும், மருமக்களுக்கும் அரசாங்கத்தின் சொகுசு வாகனங்களை வழங்காமை மற்றும் அரசாங்க செலவில் கொழும்பு 7 இல் சொகுசு இல்லங்களை வழங்காமை.
29. இரண்டு ஜனாதிபதி மாளிகைகளைத் தவிர ஏனைய மாளிகைகளை சுற்றுலாக் கைத்தொழிலுக்காக வழங்கியமை.
30. பிரதமருக்காக ஒதுக்கப்பட்டிருந்த சுகாதாரக் கூறு கலைக்கப்பட்டமையும் அதன் அம்பியூலன்ஸ் வண்டிகள், மருத்துவ உபகரணங்களை தேசிய வைத்தியசாலைக்கு ஒப்படைத்தமையும்.
31. மது வரி செலுத்தாமல் இருந்த ஜோன்ஸ்டன் உடனடியாக நிலுவை மற்றும் அபராதத் தொகையுடன் மதுவரியை செலுத்தியமை.
32. மது வரியைச் செலுத்தாத அலோசியசிற்கு எதிராக சட்டத்தை அமுலாக்கியமை.
33. திறைசேரி பிணைமுறி விநியோகம் தொடர்பான புலன் விசாரணைகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற புலன்விசாரணைகள், தினேஷ் ஷாப்டர் படுகொலையுடன் தொடர்புடைய புலன்விசாரணை, (இதுவரை ஒரு தற்கொலையாகவே கருதப்படுகின்றது) 2007 ஆம் ஆண்டில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரவீந்திரநாத் சுப்பிரமணியம் காணாமல் போனமை தொடர்பான புலன்விசாரணை, 2023.12.31 ஆம் திகதி வெலிகம W15 ஹோட்டலுக்கு எதிரில் வெலிகம பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இறந்தமை பற்றிய புலன்விசாரணை, ஊடகவியலாளர் தாரகி சிவராம் (தர்மரத்னம் சிவராம்) படுகொலையுடன் தொடர்புடைய புலன் விசாரணை, லலித் குமார் மற்றும் குகன் முருகநாதன் ஆகிய இருவரும் வலிந்து காணாமலாக்கப்பட்டமை பற்றிய புலன்விசாரணைகளை துரிதப்படுத்தியமை.
34. மேலும் இந்நாட்டில் பரபரப்பினை ஏற்படுத்திய சம்பவங்களுடன் தொடர்புடைய (கிறிஷ் கொடுக்கல் வாங்கல், யோஷித ராஜபக்ஷவின் காணி, லசந்த படுகொலை, தாஜுடீன் படுகொலையை உள்ளிட்ட) விசாரணைகளை துரிதப்படுத்தியமை.
35. தேர்தலுக்காக செயலாற்றியமையின் அடிப்படையில் வைத்தியசாலைகள், மின்சாரம், கல்வி, விமான நிலையம், இபோச, வீடமைப்பு ஆகிய அரசாங்க நிறுவனங்களில் தொழில்களை வழங்கி நிரப்புவதற்கு முற்றுப்புள்ளி வைத்தமை.
36. இனவாத, மதவாத அடிப்படையில் நாட்டில் நிலவிய அவநம்பிக்கை மற்றும் சுதந்திரம் அற்றுப்போதலை ஒழித்தமை.
37. பொலிஸாரை அரசியல் அழுத்தங்களிலிருந்து விடுவித்தல்.
38. அறுகம்குடா சம்பவத்தின்போது நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் முறைப்படியும் துரிதமாகவும் செயலாற்றி நாட்டைப் பாதுகாத்தமை.
39. டிஜிட்டல் பொருளாதாரமொன்றை நோக்கி பயணிக்கின்ற பணிகளை தொடங்கியமை.
40. உலகின் உச்சமட்டத்தில் இருக்கின்ற புத்திஜீவிகளுக்கு வாய்ப்பினை வழங்கி நாட்டுக்கு மீண்டும் புத்துயிரளிக்கும் செயற்பாங்கினை பலப்படுத்தியமை.
41. உலகின் பல்வேறு நிறுவனங்களில் உயர்ந்த சம்பள அடுக்குகளில் சேவையாற்றிய புத்திஜீவிகள் அந்த சம்பளத்தைக் கைவிட்டு இந்நாட்டில் எந்தவிதமான சம்பளத்தையும் பெறாமல் தன்னிச்சையாக நாட்டுக்கு செயலாற்றுவதற்காக வருகைதந்தமை.
42. நாளொன்றில் 06 ஆக நிலவிய பஸ் வண்டி விபத்துக்களின் எண்ணிக்கையை 02 ஆக குறைப்பதில் வெற்றிகண்டமை.
43. யோகற், பால் பைக்கற், திரவப் பால் விலையை 15% ஆல் குறைத்தமை.
44. பொருளாதார, அரசியல், சமூக மற்றும் கலாசார நிலைமாற்றத்திற்கான கிளீன் ஸ்ரீலங்கா கருத்திட்டத்தை ஆரம்பித்தமை.
45. கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் 2020 ஆம் ஆண்டில் இல்லாதொழித்த ஓய்வூதியத்தை அதிகரிக்கின்ற செயற்பாங்கினை மீண்டும் அமுலாக்கியமை.
46. வெளிநாட்டு விஜயங்களின்போது குடும்பத்தாரை புடைசூழ அழைத்துச்சென்று மக்களின் பணத்தை விரயமாக்காமல் அத்தியாவசியமான ஆட்களை மாத்திரம் கூட்டிக்கொண்டு போனமை.
47. வெளிநாட்டு விஜயங்களின்போது இந்நாட்டின் டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாங்கிற்கான கொடையளிப்பாக ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ள முடிந்தமை மற்றும் இந்தியக் கடன்களை உதவிகளாக மாற்றிக் கொண்டமை.






தொடர்ச்சி.... 7ஆம் பக்கம்

ஸ்ரீமால் சக்ரவர்த்

# யாழ்ப்பாணம் மையத்துக்கு திருவள்ளுவர் பெயர் உறவை வலுப்படுத்தும்: மத்திய இணை அமைச்சர் எல்.முருகன்

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

யாழ்ப்பாணம் மையத்துக்கு திருவள்ளுவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தியா – இலங்கை உறவு வலுப்படும் என மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இந்தியாவின் உதவியால் கட்டப்பட்ட கலாசார மையத்திற்கு பிரதமர் மோடி 2015ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டினார். இந்த கலாசார மையம் 2023ஆம் ஆண்டு மாசி மாதம் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் கலாசார மையத்துக்கு கடந்த சனிக்கிழமை திருவள்ளுவர் கலாசார மையம் என புதிய பெயர் சூட்டப்பட்டது. இந்த நிகழ்வு குறித்த புகைப்படங்களை இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் தனது எக்ஸ் வலைதளத்தில் பகிர்ந்து இருந்தது. யாழ்ப்பாணம் கலாசார மையத்துக்கு திருவள்ளுவர் பெயர் சூட்டியதை பிரதமர் நரேந்திர மோடி பாராட்டி இருந்தார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மையத்துக்கு திருவள்ளுவர் பெயர் சூட்டி இருப்பதை மத்திய இணை அமைச்சர் எல். முருகன் பாராட்டி உள்ளார். இதுகுறித்து மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறி இருப்பதாவது,

நமது அயல் நாடான இலங்கையில், மத்திய அரசின் நிதியுதவி கொண்டு அமைக்கப்பட்ட 'யாழ்ப்பாணம் கலாசார மையத்திற்கு', உலகப் பொதுமறையான திருக்குறள் தந்த 'தெய்வப்புலவர்' அய்யன் திருவள்ளுவரின் பெயர் சூட்டப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சி தருகிறது.

நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடியால், அடிக்கல் நாட்டப்பட்டு, 2023ஆம் ஆண்டு 'யாழ்ப்பாணம் கலாசாரம் மையம்' திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டிருந்தேன். பல்வேறு விதமான நவீன வசதிகளுடனும், இரண்டு தேசங்களுக்கும் இடையிலான உறவை குறிக்கின்ற வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள கல்வெட்டுகள் மற்றும் பழங்கால படிமங்களுடன் உருவாக்கப்பட்டுள்ள இந்த கலாசார மையத்திற்கு, தற்போது வள்ளுவரின் பெயர் சூட்டப்பட்டிருப்பது மிகுந்த பொருத்தமானதாக அமைந்துள்ளது.

மேலும், இரண்டு தேசங்களுக்கும் இடையிலான கலாசார உறவானது வலுப்பெறும் என்பதும் கூடுதல் மகிழ்ச்சி அளிக்கிறது. உலகின் தொன்மையான, இனிமையான மொழி தமிழ் என்பதை உலகம் முழுவதும் சென்று உரக்கச் சொல்லி வரும் பிரதமர் நரேந்திர மோடி, தமிழுக்காக ஆற்றி வரும் பணிகள் அளப்பரியது. அதுபோலவே திருக்குறளையும், திருவள்ளுவரின் புகழையும் உலகின் முழுதும் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்து வருகிறார்.

பிரான்ஸ் நாட்டின் செர்ஜி நகர் உள்ளிட்ட வெளிநாடுகளில் திருவள்ளுவருக்கு சிலை வைத்தும், ஐ.நா. சபை போன்ற உலகின் மாபெரும் அரங்குகளில்



எல்.முருகன்




திருக்குறளையும், தமிழ் இலக்கிய வரிகளையும் குறிப்பிட்டு பிரதமர் நரேந்திர மோடி பெருமைப்படுத்தினார்.

உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களை, மொழி, கலாசாரம் மற்றும் வரலாற்று ரீதியாக இணைக்கின்ற பாலமாக திருவள்ளுவர் கலாசார மையம் அமைக்கப்படும் என பா.ஜ.க. கடந்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் வாக்குறுதி அளித்து தேர்தல் அறிக்கை வெளியிட்டது.

கொடுத்த வாக்குறுதியின்படி உலகம் முழுவதும் திருவள்ளுவர் கலாசார மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிங்கப்பூரில் திருவள்ளுவர் கலாசார மையம் அமைக்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு அறிவித்தார்.

தற்போது இலங்கையின் யாழ்ப்பாணத்திலும் திருவள்ளுவர் கலாசார மையம் அமைக்கப்பட்டுள்ளது உலக தமிழர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்றார்.

## தமிழ் மொழிக்கு மூன்றாவது இடம்: அமைச்சர் அதிர்ச்சி



யாழில் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தின் பெயர்ப் பலகையில் தமிழ் மொழிக்கு மூன்றாவது இடம் கொடுக்கப்பட்டிருந்ததை பார்த்து தான் அதிர்ச்சியுற்றதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் – பலாலி வீதி, கந்தர் மடப்பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் காரியாலயத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசின் நிதி பங்களிப்புடன் திறந்து வைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாச்சார மையமானது திருவள்ளுவர் கலாசார மையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வில் நானும் அதிதியாக கலந்து கொண்டவன் என்ற வகையில் பெயர் மாற்றம் தொடர்பில் திரை நீக்கத்தின் போது தான் அவதானித்தேன்.

திருவள்ளுவர் கலாசார மையம் எனப் பெயர் மாற்றியது குற்றம் அல்ல. யாழ்ப்பாணத்திற்கே உரித்தான பெயர்களான யாழ். கலாச்சார மையம் அல்லது யாழ். பண்பாட்டு மையம் என்ற பெயர் சூட்டியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

பெயர் சூட்டும் நிகழ்வில் திருவள்ளுவர் கலாசார மையம் என காட்சிப்படுத்தப்பட்ட இலத்திரனியல் திரையில் தமிழுக்கு மூன்றாவது இடம் வழங்கப்பட்டமை கவலை தரும் விடயமாக இருந்தது. அதனைப் பார்த்து நான் அதிர்ச்சியடைந்தேன்.

தமிழ் மக்கள் வாழும் பகுதியில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். சில வேளை தெரியாமல் சில தவறுகள் இடம்பெற்று இருக்கக் கூடும்.

குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் நான் இன்னும் கலந்துரையாடவில்லை. நிச்சயமாக அது தொடர்பில் கலந்துரையாடி இனிவரும் காலங்களில் தவறுகள் இடம்பெறா வண்ணம் செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## 'யாழ்ப்பாணம்' என்ற பெயர் நீக்கம் தமிழ் மக்களின் அடையாளங்களை அழிக்க முனைகின்ற தீய சக்திகளின் மறைகரமா?



(பு.கஜிந்தன்)

கலாசார மையத்தின் பெயர் மாற்றம் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும் – டக்ளஸ் தேவானந்தா!

யாழ்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கலாசார மையத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழத் தமிழர்களின் கலாசார பாரம்பரியங்களை பேணிப் பாதுகாத்து வளர்ப்பதனை நோக்கமாக கொண்டு இந்திய அரசினால் வழங்கப்பட்ட இந்தக் கலாசார மையம் தமிழ் மக்களின் அடையாளமாக தற்போது காணப்படுகின்றது.

கடந்த 2010ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்ட வேளையில், அப்போதைய பாரதப் பிரதமர் மன்மோகன் சிங், தலைமையிலான அரசாங்கத்திடம் என்னால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே குறித்த கலாசார மையத்தினை இந்தியா எமக்கு அளித்திருக்கின்றது.

யாழ். மாநகர சபைக்கு சொந்தமான காணியில் அதனை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் அனைத்தும் எம்மாலேயே முன்னெடுக்கப்பட்டிருந்தன. இவ்வாறான பின்னணியிலேயே குறித்த பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

உலகப் பொதுமறையான திருக்குறளை எமக்களித்த திருவள்ளுவர் எமது மதிப்பிற்குரியவர். அவரையும் அவருடைய ஆளுமையையும் போற்றிப் புகழ்வதில் தமிழர்கள் யாருமே பின்நிற்கப் போவதில்லை. கடந்த காலங்களில் இந்திய அரசினால் வழங்கப்பட்ட திருவள்ளுவர் சிலைகளை எமது மக்கள் ஆர்வத்துடனும் பெருமிதத்துடன் பிதிஷ்டை செய்து பராமரித்து வருகின்றனர்.

எனினும் இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களின் அடையாளங்களுள் ஒன்றான 'யாழ்ப்பாணம்' என்ற பெயர் நீக்கப்பட்டிருப்பதானது, தமிழ் மக்களின் அடையாளங்களை அழிக்க முனைகின்ற தீய சக்திகளின் மறைகரம் இந்தப் பெயர் மாற்றத்தின் பின்னணியில் இருக்குமோ என்ற நியாயமான சந்தேகத்தினை எமது மக்களுக்கு ஏற்படுத்தி இருப்பதனை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான சந்தேகங்கள், இந்த நாட்டிலே புரையோடிப் போய் இருக்கின்ற தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அவசியமான தேசிய நல்லிணக்க முயற்சிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற வகையில், இதனுடன் நேரடியாக தொடர்புபட்டிருந்த இந்திய தூதரக அதிகாரிகள், இலங்கையின் தற்போதைய புத்தசாசன சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் கடற்றொழில் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர் போன்றோர் பெயர் மாற்றப்பட்டமைக்கான காரணம் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் என்று

## "கிளீன் ஸ்ரீலங்கா" நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் விழிப்புணர்வு



(மல்லிகா செல்வரத்தினம்)

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் "கிளீன் ஸ்ரீலங்கா" நிகழ்ச்சித் திட்டத்தை நடை முறைப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (17) மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சு.சு. சோபிகா தலைமையில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில், பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கணக்காளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் "கிளீன் ஸ்ரீலங்கா" நிகழ்ச்சித் திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். நகர் மேற்கு சமுர்த்தி வங்கியின் கட்டுப்பாட்டுச்சபை தெரிவு

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் யாழ். நகர் மேற்கு சமுர்த்தி வங்கியின் புதிய கட்டுப்பாட்டுச்சபை தெரிவு கடந்த 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இவ்வருடத்திற்கான புதிய கட்டுப்பாட்டுச்சபை நிர்வாகத் தெரிவு இடம்பெற்றிருந்தது.

## மன்னாரில் இளம் பெண்ணின் சடலம் மீட்பு



(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட தோட்டக்காடு புகையிரத கடவையின் அருகில் இளம் பெண் ஒருவரின் சடலம் நேற்று (20) அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்தில் குறித்த பெண் மோதி உயிரிழந்திருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் மன்னார் ஜீவபுரம் பகுதியில் வசித்து வந்துள்ள நிலையில் வெள்ளம் காரணமாக தற்காலிகமாக தோட்டக் காட்டில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்த நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த மரணம் தொடர்பாக மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மன்னார் தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் அடம்பனில் பண்பாட்டியல் பொங்கல் விழா

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில்,தமிழர் திருநாளாம் தைத்திருநாள் பொங்கல் விழா பண்பாட்டியல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (19) காலை 11 மணியளவில் மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மன்னார் தமிழ் சங்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் சிறப்பு விருந்தினராக அடம்பன் மத்திய மகா வித்தியாலய பாடசாலை அதிபர் மை.கிறிஸ்ரியான் உட்பட அடம்பன் பங்கு தந்தை சீமான், சட்டத்தரணி எம்.சபூர் தீன். தமிழ் சங்கத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


தைத்திருநாள் பொங்கல் விழா பண்பாட்டியல் நிகழ்வின் ஓர் அங்கமாக வரவேற்பு நடனம், கிராமிய நடனம், கவிதை, பேச்சு, குழுப்பாடல்,நவீனம் குறியீட்டு நாடகம்,கருத்துக்களம் ஆகிய நிகழ்வுகளும்



இடம்பெற்றதுடன் தமிழ் சங்கத்தினால் விருந்தினர்களுக்கு நினைவு சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் ஹமாஸ் போர் நிறுத்தம்: ட்ரம்ப் காரணமா?









இஸ்ரேல் – ஹமாஸ் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்திருப்பதால் காஸாவில் 470 நாட்களுக்குப் பிறகு மீண்டும் அமைதி திரும்பியுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தப்படி, முதல் கட்டமாக ஹமாஸ் 3 இஸ்ரேல் பணயக்கைதிகளை விடுவித்ததற்கு ஈடாக, 90 பலஸ்தீன கைதிகளை விடுவித்திருப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்த சூழலில், போர் நிறுத்த ஒப்பந்தம் இறுதியானதில் யாருடைய பங்கு அதிகம் என்ற போட்டி தற்போது ஏற்பட்டுள்ளது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப் ஆகியோரும் இந்த ஒப்பந்தத்திற்கு தாங்கள் தான் காரணம் என்று கூறி வருகின்றனர். ஆனால் “எதிர்ப்பு கூட்டணியின்” (Axis of Resistance) சக்தி தான், இஸ்ரேலை அடிபணிய வைத்ததாக ஈரானும் ஹூதி கிளர்ச்சியாளர்களும் கூறுகின்றனர்.

ஈரான் ஆதரவில் செயல்படும் மாஸ், லெபனானின் ஹெஸ்பொலா, ஏமனின் ஹூதி, ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஆயுதமேந்திய ஷியா பிரிவினர் இதில் அடங்குவார்கள். இவர்கள் அனைவரும் இஸ்ரேலை எதிரியாக பார்க்கின்றனர். இந்த ஆயுதமேந்திய அமைப்புகளின் கூட்டணி ஈரானின் ஆயுதமாக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் செயல்பட்டு வருகிறது.

## ஈரான் கூறுவது என்ன?

ஈரானின் அதி உயர் தலைவரான ஆயதுல்லா அலி காமனெயி தன்னுடைய எக்ஸ் சமூக வலைத்தள பக்கத்தில், “பலஸ்தீனத்தின் எதிர்ப்பு, இஸ்ரேலை பின்னுக்கு தள்ளியுள்ளது என்பதற்கு, இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தமே ஆதாரம். காஸா மக்களுக்கும், தொடர்ச்சியான பலத்தீனர்களின் எதிர்ப்பும் தான் யூத ஆட்சியை பின்வாங்க நிர்ப்பந்தித்துள்ளது என்பதை உலகம் இன்று அறிந்துள்ளது.

பல ஆயிரக்கணக்கான பெண்களும், குழந்தைகளும் சில யூத குழுக்களால் கொல்லப்பட்டனர். ஆனால் இறுதியில் அவர்கள் வீழ்த்தப்பட்டனர் என்று ஒரு நாள் வரலாற்று புத்தகத்தில் எழுதப்படும்” என பதிவிட்டுள்ளார். ஈரானால் ஆதரிக்கப்படும் ஹமாஸ் அமைப்பு, கடந்த 2023-ஆம் ஆண்டு அக்டோபர் 7-ஆம் திகதி அன்று தெற்கு இஸ்ரேலில் தாக்குதல் நடத்தியது. அதில் 1,200 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடியாக காஸா மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதல்களில் இதுவரை 50 ஆயிரம் பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் என்று ஹமாஸ் கட்டுப்பாட்டில் உள்ள காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்தது. போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தான நிலையில், ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர படையினர் ஹமாஸுக்கு வாழ்த்து தெரிவித்து அறிக்கை வெளியிட்டனர்.

வரலாற்று தாக்குதலை ஹமாஸ் நடத்தியதாகவும், அது மிகவும் அசாதாரணமானது என்றும் அறிக்கையில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த ஒப்பந்தம் பலஸ்தீனர்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்றும், இஸ்ரேலுக்கு கிடைத்த மிகப்பெரிய தோல்வி என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தனர். எனினும், இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவை நம்ப முடியாது என எச்சரித்துள்ள அவர்கள், புதிய போருக்கு ஹமாஸ் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சகமும் இந்த ஒப்பந்தத்தை பலதஸ்தீனர்களுக்கு கிடைத்த வரலாற்று வெற்றி என்று தெரிவித்துள்ளது.

## “நெதன்யாகு மீது நம்பிக்கை இல்லை”

ஈரான் ஆதரவு பெற்ற ஏமனின் ஹூதி அமைப்பு இந்த ஒப்பந்தம் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க உள்ளதாக அறிவித்துள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தம் எவ்வாறு நடைமுறைபடுத்தப்படுகிறது என்பதை தன்னுடைய அமைப்பு கண்காணிக்கும் என்று, ஹூதி தலைவர் அப்துல் மாலிக் ஹல் ஹூதி வியாழக்கிழமை தெரிவித்தார். இந்த ஒப்பந்தம் மீறப்பட்டால், ஹூதி அமைப்பினர் இஸ்ரேல் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துவார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

இஸ்ரேலிய படையினர் காஸா மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்தும் வரை, ஏமன் கடற்கரை மற்றும் செங்கடலில் உள்ள இஸ்ரேலிய கப்பல்கள் மீது பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தப்படும் என்று ஹூதி அமைப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஏற்கனவே இதுபோன்ற தாக்குதல்களை அவர்கள் நடத்தியுள்ளனர். 2023-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல், இவர்கள் நடத்திய தாக்குதல்கள் காரணமாக இந்த மார்க்கத்தில் கடல்வழி வர்த்தகம் நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் தாக்குதல் காரணமாக, இந்த மார்க்கத்தில் வரவேண்டிய கப்பல்கள் அனைத்தும் சுயஸ் கால்வாய் வழியாக வருவதற்கு பதிலாக தென்னாபிரிக்காவை சுற்றி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், பொருட்களை மற்ற நாடுகளுக்கு அனுப்பும் நிறுவனங்களின் செலவினங்கள் அதிகரித்துள்ளன.

கடல்சார் வர்த்தகத்தில் ஏற்படும் விலை உயர்வு காரணமாக உலகம் முழுவதும் பணவீக்கம் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. ஏமனின் ஒரு பகுதி ஹூதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. தலைநகர் சனாவும் இதில் அடங்கும். 2014-ஆம் ஆண்டு ஹூதி கிளர்ச்சியாளர்கள் சனாவை கைப்பற்றினார்கள். ஹூதி கிளர்ச்சியாளர்கள் இஸ்ரேல் மீது ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தினர். பதிலுக்கு ஹூதி கிளர்ச்சியாளர்களின் பல தளங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இஸ்ரேலிய போர் விமானங்கள் ஏமனைச் சுற்றி அமைந்திருக்கும் இரண்டு துறைமுகங்கள் மற்றும் ஒரு மின் நிலையத்தையும் தாக்கின. கடந்த மாதம் பெஞ்சமின் நெதன்யாகு, ஹூதிகளுக்கு எதிராக தனது நாடு தாக்குதலை ஆரம்பித்துள்ளது என்று கூறினார்.

## ட்ரம்ப் அல்லது பைடன் - யார் காரணம்?

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடனும், புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற டொனால்ட் ட்ரம்பும் தங்களது பங்களிப்பால் தான் இந்த ஒப்பந்தம் இரு தரப்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று வாதிடுகின்றனர். இந்த ஒப்பந்தத்தை வரவேற்ற பைடன், தொடர்ச்சியாக, அதே நேரத்தில் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் இது சாத்தியமானது என்று கூறியுள்ளார்.

புதன்கிழமை வெள்ளை மாளிகையில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், அன்று மிகவும் மன திருப்தியுடன் இருப்பதாக தெரிவித்தார்.

தன்னுடைய வாழ்நாளில் இதுவரை மேற்கொண்ட பணிகளிலே மிகவும் கடினமான பணி இது என்று அந்த ஒப்பந்தத்தைக் குறிப்பிட்டார். டொனால்ட் ட்ரம்பும் கூட, இந்த வெற்றியில் தனக்கும் பங்கிருப்பதாக கூறிக் கொள்கிறார். 2024-ஆம் ஆண்டு மே மாதம், அவர் இந்த ஒப்பந்தத்திற்கான ஒரு திட்டத்தை வழங்கினார் என்றும் அதன் அடைப்படையில் தான் இந்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது என்றும் கூறினார்.

“ட்ரூத் சோசியல்” என்ற அவரின் சொந்த சமூக ஊடகத் தளத்தில் இது குறித்து எழுதியுள்ள அவர், அமெரிக்க தேர்தலில் தான் வெற்றி பெற்றதன் விளைவாகவே இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது என்று கூறியுள்ளார். “என்னுடைய ஆட்சியின் கீழ் உலகில் அமைதியை நிலைநாட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்” என்ற செய்தியை உலகிற்கு சொல்லியுள்ளது இந்த ஒப்பந்தம் என்று அவர் பதிவிட்டார். “அமெரிக்கர்கள் மற்றும் அமெரிக்காவின் நட்பு நாடுகளின் பாதுகாப்புக்காக அமெரிக்கா தொடர்ந்து அமைதியை ஏற்படுத்த பேச்சுவார்த்தை நடத்தும்” என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஒப்பந்தம் வெற்றி பெற நான் தான் காரணம் என்று பைடன் கூறிக் கொண்டிருந்த அந்த செய்தியாளர்கள் சந்திப்பின் இறுதியில் ஒரு பத்திரிகையாளர் இவ்வாறாக கேள்வி கேட்டார். “இந்த ஒப்பந்தம் இறுதியடையக் காரணம் உங்களின் முயற்சிகளா அல்லது ட்ரம்பின் முயற்சிகளா?” இது விளையாட்டாய் கேட்கப்பட்ட கேள்வி தானே? என்று பதில் கேள்வி எழுப்பினார் பைடன்.

– நன்றி பிபிசி





# நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு




(எம்.ரீ.ஆரிப் )

நாடளாவிய ரீதியில் பெய்து வரும் மழையினால் பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அதன்படி அநுராதபுரம் புனித நகர் பகுதியை அண்மித்துள்ள மல்வத்துஓயாவின் இருபுறமும் உள்ள தாழ் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் இப்பகுதியில் வசித்து வரும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

மல்வத்துஓயா நிரம்பி வழிவதால் அநுராதபுரம் புனித நகர் பகுதியில் உள்ள வீதி நீரில் மூழ்கியுள்ளது. இதனால் புனித நகர் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் சந்தி வரையிலான வீதிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன். நெற் காணிகளும் நீரில் மூழ்கியுள்ளன.

பெய்து வரும் கடும் மழை காரணமாக நாச்சியாதீவு நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையினால் இந்த நிலமை ஏற்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்கள அலுவலகம் தெரிவித்தது.

மல்வத்துஓயாவின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்வடைந்து வரும் நிலையில் மல்வத்து ஓயாவின் தாழ்நிலப் பகுதியில் வசித்து வரும் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு நாச்சியாதீவு நீர்ப்பாசன பொறியாளர் அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மகா கனந்தராவ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால் இரண்டு வான் கதவுகள் 02 அடி உயரத்தில் திறக்கப்பட்டுள்ளது. இதனால் பல உள்ளக வீதிகளின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.கலாவெவ நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையினால் அவுகன கெக்கிராவ வீதியில் அவுகன விகாரைக்கு அருகாமையில் உள்ள வீதிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் முப்பது வான் கதவுகளில் 10 வான் கதவுகள் இது வரை திறக்கப்பட்டுள்ளதுடன் வினாடிக்கு 12063 கன அடி நீர் கொள்ளளவு கலாஓயாவுக்கு திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பானத்திற்கு பொறுப்பான பொறியாளர் தெரிவித்தார். இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் வில்பத்து தேசிய பூங்காவிற்கான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

## கிண்ணியா கடற்கரைப் பூங்கா கடலலையால் சேதம்



(கியாஸ் ஷாபி)

கடந்த சில தினங்களாக பெய்து வரும் கனமழை காரணமாக, கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு, கிண்ணியா கடற்கரை பூங்காவின் அடுத்த பகுதியையும் கடலலை கொண்டு சென்றுள்ளது.

கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இந்தப் பூங்கா அலங்கரித்துக் கொண்டிருந்த பெரிய மரம் ஒன்று வேரோடு விழுந்ததனால், பூங்காவின் ஒரு பகுதியை கடல் அலை அடித்துச் சென்றிருந்தது.

அந்த நேரத்தில், கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகரும், வெளிவவிகாரப் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவும் நேரில் வந்து இந்த பூங்காவை பார்வையிட்டிருந்தனர்.

இதன்போது, எதிர்காலத்தில் இந்தப் பூங்காவை உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென ஆளுநர் தெரிவித்திருந்தார்.

ஆனாலும் அதற்கிடையில், திங்கட்கிழமை இன்னும் ஒரு பெரிய மரமும் வேரோடு விழுந்ததனால், பூங்காவின் அடுத்த பகுதியும் கடலுக்கு இரையாகியுள்ளது.

இந்த நிலையில், பூங்காவின் எஞ்சியுள்ள பகுதி அவசரமாக பாதுகாக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில், இன்னும் ஒரு வெள்ளம் ஏற்படுகின்ற போது, பூங்காவை முழுமையாக இழக்க வேண்டி ஏற்படும் எனவும், இந்த நிலையில் பூங்காவை பாதுகாப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்த வேண்டுமெனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மட்டக்களப்பு குளங்களின் நீர்மட்டங்கள் அதிகரிப்பு




(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரணமாக களுவாஞ்சிகுடி, வெல்லாவெளி, பட்டிப்பளை உள்ளிட்ட பல பிரதேசங்களிலுமுள்ள தாழ் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் மாவட்டத்தில் மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வதிலும் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றர். நேற்று திங்கட் கிழமை (20) காலையிலிருந்து மழை சற்று ஒய்ந்துள்ளது. இருந்த போதிலும் வெள்ள நீர் விரைவாக மட்டக்களப்பு வாவியை நோக்கி வழிந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில் களுவாஞ்சிகுடி, களுதாவளை, தேற்றாத்தீவு, வெல்லாவெளி, பழுகாமம், போதீவு, குருமண்வெளி, உள்ளிட்ட பல பகுதிகளிலுமுள்ள கிராமியக் குளங்கள் அனைத்தும் நிரம்பி வழிந்து வருகின்றன.

எனினும் கிராமங்களிலுள்ள பெரும்பாலான உள்வீதிகள் வெள்ள நீரினால் மூழ்கப்பட்டுள்ளனதனால் உள்ளூர் போக்குவரத்துச் செய்வதிலும் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது இவ்வாறு இருக்க மண்டூர் – வெல்லாவெளி வீதியை ஊடறுத்து வெள்ளநீர் விரைவாகப் பாய்வதனால் அங்கு இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளதுடன், அவ்வீதியுடனான போக்குவரத்திற்காக போரதீவுப் பற்றுப் பிரதேச சபை உழவு இயந்திரங்கள் மூலம் போக்குவரத்தில் ஈடுபயணிகளை ஏற்றி இறக்கி வருகின்றனர்.

இது இவ்வாறு இருக்க திங்கட்கிழமை காலை 6 மணிவரையில் நவகிரிக் குளத்தின் நீர்மட்டம் 31.அடி 5அங்குலம், உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் 32அடி 8அங்குலம், உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 18அடி 3அங்குலம், கட்டுமுறிவுக் குளத்தின் நீர்மட்டம் 12 அடி 6 அங்குலம், கித்துள்வெவ குளத்தின் நீர்மட்டம் 12அடி 3அங்குலம், வெலிக்காக்கண்டிய குளத்தின் நீர்மட்டம் 16அடி 11அங்குலம், வடமுனைக்குளத்தின் நீர்மட்டம் 13அடி 5அங்குலமாகவும் உயர்ந்துள்ளதாகவும் அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியிலாளர்கள் தெரிவித்துள்ளர்.

## கலா ஊயா பகுதியில் வெள்ள எச்சரிக்கை

(எம்.எச்.எம்.சியாஜ்)

கலா ஓயா ஆற்றுப்படுகையில் உயர் மற்றும் மத்திய பிரதேசங்களில் பெய்த கடும் மழை காரணமாக கலா ஓயா நீர்மட்டம் வெள்ள எச்சரிக்கையை நெருங்கியுள்ளது.

மேலும் ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் நீர் வெளியேறும் வான் கதவுகள் திறக்கப்பட்டு தற்போது 17000 கன அடி வேகத்தில் நீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. தற்போது நீர்த் தேக்கத்திற்கு கிடைக்கும் நீர் கொள்ளளவுக்கு இணங்க எதிர்காலத்தில் இந்தத் தொகை மேலும் அதிகரிக்கப்பட வேண்டியேற்படலாம்.

இந்நிலை காரணமாக ஆற்றுப் படுகையை அண்மித்துள்ள ராஜாங்கனை, நொச்சியாகம, வனாத்தவில்லு மற்றும் கருவலகஸ்வெவ போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட வெள்ளப்பெருக்கின் தாழ்வான பகுதிகளுக்கு வெள்ள எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலை குறித்து மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு அப்பிரதேச மக்களையும் அந்தப் பிரதேசங்களுக்கு ஊடாக பயணிக்கும் வாகன ஓட்டுனர்களிடமும் நீர்ப்பாசனத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

## கல்முனை கடற்கரை பிரதேசங்கள் துப்புரவு நடவடிக்கைகள்



(பாறுக் ஷிஹான்)

கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் கல்முனை பிராந்தியத்தில் கடற்கரை பிரதேசங்கள் சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் கல்முனை கடற்கரை பிரதேசத்தை சுற்றியுள்ள கடற்கரைப்பகுதிகளை கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தினருடன் இணைந்து கல்முனை பெரிய முகைதீன் ஜும்மா பள்ளிவாசல், கடற்கரை நாகூர் ஆண்டனை தர்ஹா பள்ளிவாசல் நிர்வாகம், கல்முனை விசேட அதிரடிப்படையினர், இராணுவம், பிரதேச செயலகம், கல்முனை பிராந்திய பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சமூர்த்தி பயனாளிகள், கல்முனை மாநகர சபை விளையாட்டுக் கழகங்கள் உட்பட பிரதேச வாழ் பொதுமக்களும் மேற்கொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர் ஆலோசனையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியும் கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவின் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக், சுற்றுச் சூழல் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான சிவநாதன், சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான வாஹிட் மோட்டார் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான பி.ரி.நஸீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புலிபாய்ந்த கல் பாதை நீர்மட்டம் உயர்வு போக்குவரத்து தடை



(ருத்ரா)

கிரான் பிரதேச செயலகப் பிரிவில் புலிபாய்ந்த கல் பாதை நீர்மட்டம் உயர்ந்து இருப்பதால் அந்தப் பாதையூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. மாவட்டத்தின் குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டதனாலும் பருவப் பெயர்ச்சி மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் மாவட்டத்தின் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் குடும்பிமலை, புலிபாய்தகல் திகிலிவெட்டை, கோராவெளி, பெண்டுகள் சேனை. சாராவெளி, முறுத்தானை போன்ற கிராமங்கள் உட்பட பல்வேறு கிராமசேவகர் பிரிவுகளில் வாழும் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிரான் புலிபாந்த கல் வீதியில் குறிப்பிட்ட அளவு சுமார் 300 மீற்றர் தூரம் வரை மக்கள் வெள்ள நீரோட்டம் ஊடாக கால் நடையாக நடந்து சென்று தங்களது பொருட்களை சுமந்து அப்பாலுள்ள படகு சேவை இடம்பெறும் இடத்தை அடைந்து அங்கிருந்து தமது போக்குவரத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.இவ் படகுசேவையினை கிரான் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்துள்ளது.

சந்திவெளி துறை ஊடான போக்குவரத்திற்கான படகு சேவை கோறளைப்பற்று பிரதேச சபை மேற்கொண்டு வருகிறது. இருந்தபோதிலும் ஏற்கனவே பாதை ஊடாக அச்சமின்றி தங்களது பயணங்களை மேற்கொண்டிருந்தனர்.

தற்போது குறித்த பாதை பழுதடைந்துள்ளதால் படகில் தங்களது போக்குவரத்தினை மேற்கொள்வதில் அச்சநிலை உள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.இவ் மக்கள் திகிலிவெட்டை,குடும்பிமாலை போன்ற அயல் கிராமங்களுக்கு தங்களது போக்குவரத்தினை மேற்கொண்டு வருகின்றனர். புலிபாய்ந்தகல் பிரதான வீதிக்கான பாலத்தினை அபிவிருத்தி செய்து தந்தால் வெள்ள காலத்தில் தங்களது போக்குவரத்தினை மேற்கொள்ள இலகுவாக அமையும் என தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கோறளைப்பற்று கிரான் தெற்கு பிரதேச செயலகம் தற்காலிகமாக பொது மக்களின் சேவைக்காக கோரகல்லிமடுவில் உள்ள அரச கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாவட்டத்தின் சில குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் ஆற்றை அண்டிய பிரதேசங்கள் மற்றும் தாழ் நிலப் பிரதேசங்களில் வாழும் மக்கள் அவதானத்துடன் கடல் ஆறு குளம் போன்றவற்றில் நீராடுவதை தவிர்த்துக் கொள் வேண்டும்.மேலும் மீன் பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களும் மிக அவதானத்துடன் இருக்கவேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

### தரம் ஒன்று மாணவர் அனுமதிக்கு

# நிதி கோரும் சம்பவங்கள் கிழக்கில் அதிகரிப்பு!

## பெற்றோர், பொதுநல அமைப்புகள் கவலை!!

**(முகம்மட் முக்தார்)**

கிழக்கு மாகாணத்தில் அரச பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு பணம் அறவிடும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக பெற்றோர் மற்றும் சமூக அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

இது தொடர்பாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித்திணைக்களம், வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிள்ளைகளை முதலாம் தரத்திற்கு அனுமதிப்பதற்கென பெற்றோரிடம் பொருளாகவும், பணமாகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்சங்கம் என்பவற்றைக் கொண்ட குழுக்களை அமைத்து மிகவும் தந்திரமான முறையில் இவ்வனுமதிக்கான அறவீட்டை பாடசாலை அதிபர்கள் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

பாடசாலையில் மின்சாரம், தண்ணீர், தளபாடம், மற்றும் வேறு தேவைகளுக்கென குறைந்தது 5,000 ரூபா முதல் 50,000 ரூபா வரை பண அறவீடுகளை செய்து வருவதாகவும் சில பாடசாலைகளில் பாடசாலை தளபாடங்களை கடைகளில் இருந்து பெற்றுத்தருமாறு கோருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு பண அறவீடு மேற்கொள்ளும் பாடசாலைகள் பற்றி வலய கல்விப்பணிப்பாளர்களுக்கு அறிவிக்கின்ற போது அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதிருப்பது பண அறவீடு செய்யும் அதிபர்களை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளதாகவும் பெற்றோரும் பொது நல அமைப்புக்களும் மேலும் சுட்டிக்காட்டுகின்றன. நாட்டில் பல இடங்களில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கையில் பண அறவீடு செய்யும் அதிபர்கள் பலர் கையும் மெய்யுமாக கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்துகையில் கிழக்கு மாகாணத்தில் இவ்வாறான பெற்றோரை வதைக்கும் செயற்பாடுகளை மேற்கொள்வோர் சட்டத்தின் பிடிக்குள் அகப்படாது தப்பிக்க விடப்படுகின்றனர்.

எதிர்வரும் 27 ம் திகதி முதலாம் தரத்திற்கு மாணவர்கள் தேசிய அளவில் அனுமதிக்கும் தினமாகையால் பாடசாலைகளில் தற்போது முதலாம் தரத்திற்கான அனுமதி வழங்கும் நிருவாக செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### 65 இலட்சம் ரூபாய் மோசடி:

# சந்தேக நபருக்கு 24 வரை விளக்கமறியல்

**(றிசாத் ஏ.காதர்)**

ஐரோப்பிய நாடொன்றுக்கு நபரொருவரை அனுப்புவதாகக் கூறி, போலி வீசாவைக் காண்பித்து, அவரிடமிருந்து 65 இலட்சம் ரூபாவினைப் பெற்று மோசடி செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரை, எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயத்தில் பணத்தை பறிகொடுத்ததாக கூறப்படும் நபர், விசேட குற்ற விசாரணைப் பிரிவின் அம்பாறை அலுவலகத்தில் 2024.12.11ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தார்.

அதற்கமைய விசேட குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைக்கு அமைவாக, அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரை சந்தேகத்தின் பேரில் 2025.01.16ஆம் திகதி கைது செய்து 2025.01.17ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

கைது செய்யப்பட்ட நபரை மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு, எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி. றிஸ்வான் உத்தரவு பிறப்பித்தார்.

மேலும், இதனுடன் தொடர்புபட்ட மற்றொரு சந்தேக நபரும், அம்பாறை விசேட குற்ற விசாரணைப் பிரிவினரால் அண்மையில் கைது செய்யப்பட்டு சம்மாந்துறை நீதவான் நீதிமன்றில் 2024.06.20ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கைது நடவடிக்கையானது 2024.06.10ஆம் திகதி விசேட குற்ற விசாரணைப் பிரிவில் செய்யப்பட்ட மற்றொரு முறைப்பாட்டுக்கு அமைவாக இடம்பெற்றிருந்தது. இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர், விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த மோசடிகளுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் பிரதான சந்தேக நபருக்கு எதிராக சம்மாந்துறை நீதவான் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதான சந்தேக நபர் என சந்தேகிக்கப்படுபவர் – அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர் என்றும், பிரித்தானியாவில் குடியுரிமை பெற்று தற்போது லண்டனில் வசித்துவருவதாகவும் விசேட குற்ற விசாரணைப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

### கிழக்கு சுகாதார பணிப்பாளரின்

# சேவை நீடிப்பை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை

**(முகம்மட் முக்தார்)**

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ள சேவை நீடிப்பை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டுமென சுகாதாரத் துறை தொழிற்சங்கங்கள் கிழக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

கிழக்கு மாகாண ஆளுநரினால் முறையற்ற வகையில் சேவை நீடிப்பு குறித்த மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டிஜீஎம். கொஸ்தா தனது 63வது வயதை பூர்த்தி செய்து கடந்த வருடம் ஓய்வுபெற்ற போதிலும் கிழக்கு மாகாண ஆளுநர் ஓய்வுபெற்ற வைத்தியர் கொஸ்தாவுக்கு இருதடவைகள் சேவை நீடிப்பு வழங்கியுள்மை தேசிய மக்கள் சக்தி அரசின் கொள்கைக்கு முரணானது எனது மேற்படி சுகாதார அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு தகுதியானவர்கள் கிழக்கு மாகாணத்தில் தமிழ்பேசும் தமிழ், முஸ்லிம் வைத்தியர்கள் பலர் சேவையில் இருக்கும் நிலையில் கிழக்கு மாகாண ஆளுநர் தமது அதிகாரத்தை தவறான வழியில் ப பயன்படுத்தி துஷ்பிரயோகம் செய்துள்ளதாக அவ்வமைப்புக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் வழங்கியுள்ள இந்த சேவை நீடிப்பை உடனடியாக இரத்து செய்யுமாறு சுகாதாரத்துறை சார்ந்த பொது அமைப்புகள் மேலும் வலியுறுத்தியுள்ளன.

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

**(அக்கரைப் பற்று நிருபர்)**



அக்கரைப்பற்று முதலியார் வீதியைச் சேர்ந்த ஆதம் பாவா நூறுல்லாஹ் அகில இலங்கை சமாதான நீதவானாக அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.சீ.றிஸ்வான் முன்னிலையில் (17) சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அரச சுகாதார முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் இவர், இந்தியாவின் காண்பூர் பல்கலைக்கழகத்தின் வணிக நிர்வாக பட்டதாரியும், அக்கரைப்பற்று அல் பாத்திமியா வித்தியாலயம் மற்றும் அக்–அஸ் ஸிராஜ் மகா வித்தியாலம் ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

ஒக்டபேட் இசை வாத்திய கலைஞரான இவர், அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி குழுவின் செயலாளராகவும், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தின் பொருளாளராகவும் பணியாற்றி வருவதோடு, அபூபக்கர் ஆதம் பாவா, உதுமாலெவ்வை அவ்வாக்குட்டி ஆகியோரின் புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கற்கை நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

**(பேரின்பராஜா சபேஷ்)**



கிழக்குப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையத்தினால் நடத்தப்பட்ட டிப்ளோமா மற்றும் சான்றிதழ் கற்கை நெறிகளுக்கான சான்றித ழ் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை (18) கிழக்குப் பல்கலைக் கழக மட்டக்களப்பு தொழில்நுட்ப பூங்கா கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கிழக்குப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் எஸ். ஜெயராஜா தலைலமயில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் வ.கனகசிங்கம் கலந்துகொண்டு கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிவைத்தார். விவசாயம் 60 பேரும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் 16 பேரும் ஆய்வுக்கூட தொழிநுட்பம் 04 பேரும் பன்மைத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சேவை வழங்கலின் மூலம் அமைதியைப் பேணுதல் கற்கை நெறியில் 09 பேரும் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர்.

# ஊடகப் பெருவெளியில் காதருக்கு வடித்த கவிதை....!!!

## மருதமுனை நினைவேந்தலில் கவிஞர் ஹஸனின் உருக்கம்



பிளம்ஸ்ஏ என்றெழுதிப்
பெருமிடை வெளியை
இட்டுவைத்தால்
காற்றும் எழுதும் காதரென்று
காலம் முழுதுங் காதரென்று
காலையில் கதிரவன்
கிழக்கினிலே
காதரின் கைகளோ பேப்பரிலே
பேரர்கள் சகிதம் சைக்கிளிலே
பெருமகன் வருவாய்
சாலையிலே
பழம்பெரும் பதிகள் போயிருந்து
பல்சுவைத் தகவல் சேகரித்து
விலேஜ் விசிற் எனநீ எழுதியவை
வலம்வந்த நாட்களை மறப்பதுவா
இளமையில் எத்தனை இடர் கடந்தாய்
எறும்பென ஊர்ந்ததைத் தட்டிவிட்டாய்
கனிகளைக் காவினில் காணுமுன்னே
காப்பவன் கடிதினில் அணைத்ததுமேன்
நவமணி தமிழன் தினகரனில்
நடப்புகள் நயமாய் எழுதிவந்தாய்
நண்பரும் நலம்பெற வேண்டுமென்றே
அன்புடன் அவரையும் அரவணைத்தாய்
கடலரு கோரம் காலையிலே
கனசனக் கூட்டம் தொழுகையிலே
காதருன் கமரா படமெடுக்கும்
காட்சிகள் இன்னமும் காணுவதேன்
ஹறிசா எனநீ அழைக்குமொலி
காதினில் இன்னும் கேட்குதடா
கடற்கரை வீதியில் நடந்ததுவும்
கண்மணியில் இன்னும் கரிக்குதடா
தோளில் தொங்கும் ஒருகமரா
தொடுகையில் கையில் மறுகமரா
பார்வை சுருக்கிப் படமெடுப்பாய் அது
படம்படமாய் நெஞ்சில் படருதடா
முன்னுரைக் காலம் முகாரியிலே
முடித்துநீ எழுந்து
நடக்கையிலே
பின்னுரைக் காலம்
மோஹனத்தில்
மின்னிய போது மறைந்தது
மேன்
கவிதையுந் தருவாய் சில
பொழுது
கனிவுடன் கதைப்பாய்
எப்பொழுதும்
பணிவுடன் பழகிய
பண்புளமே உன்
பனிமொழி கேட்பது இனிவருமோ?
ஊடகம் உனது உணவாகி
உணர்வுக ளெல்லாம் அதுவாகி
ஆடிய பாதம் காதருன்னை
ஆண்டவன் அழைத்தான்
யாது செய்வோம்
ஆயர் குழலும் உனைப்பாடும்
ஆலை நிழலும் உனைத்தேடும்
காலந்தோறும் கதைகளிலே
காதர் உனது நினைவெழுமே
குழிக்குள் வைத்துனை மண் போட்டு
குளறிய கண்களை யாரறிவார்
களத்தில் இன்னும் இருக்கின்றாய்
காதரே கண்களில் மலர்கின்றாய்
பேரண்டம் படைத்துக் காப்பவனே
பேறுகள் அனைத்தும் கொடுப்பனே
காதரைப் பொருந்தி அணைத்தெடுக்க
கரங்கள் விரித்தோம் கண்கலங்க
உன்பிழை பொறுக்க வேண்டுமென்றும்
உயரியசொர்க்கம் கிடைக்க வென்றும்
ஆலம் படைத்துக் காக்குமந்த
ஆண்டவனைத் தினம் வேண்டுகிறோம்

**மருதமுனை ஹசன் -**

# “சிறந்த மருந்தகங்களின் செயன்முறை” செயலமர்வு





**(றியாஸ் ஆதம்)**


கல்முனை பிராந்தியத்தில் உள்ள தனியார் மருந்தகங்களின் (Community Pharmacy) தரங்களை மேம்படுத்தி பொதுமக்களுக்கு சிறந்த சேவையினை பெற்றுக்கொடுக்கும் பொருட்டு, தனியார் மருந்தகங்களின் (Community Pharmacy) உரிமையாளர்களுக்கும், அதன் பணியாளர்களுக்கும் ” சிறந்த மருந்தகங்களின் செயன்முறை” தொடர்பான செயலமர்வொன்று வெள்ளிக்கிழமை (17) சாய்ந்தமருது பாவா றோயலி மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய சுற்றுச்சூழல் தொழில் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவு அம்பாறை மாவட்ட கரையோர கரையோர பாமசி உரிமையாளர்கள் சங்கத்துடன் இணைந்து குறித்த செயலமர்வினை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன், சுற்றுச்சூழல் தொழில் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத், பிராந்திய மருந்தாளர் திருமதி எஸ்.இந்திரகுமார், உணவு, மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது பிராந்திய பணிப்பாளர் சகீலா இஸ்ஸடீன், சுற்றுச்சூழல் தொழில் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எஸ். எம்.பௌசாத் ஆகியோர் தனியார் மருந்தகங்கள் (Community Pharmacy) கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள், அது தொடர்பான சட்டதிட்டங்கள் விரிவுரையாற்றினர்.

குறித்த செயலமர்வில் தனியார் மருந்தகங்களின் உரிமையாளர்கள், பணியாளர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



# விக்டர் ஐவன்

## மனித உரிமைகளுக்கான துணிகரக் குரல்



எம்.எஸ்.அமீர் ஹுசைன்

இலங்கையின் தலை சிறந்த ஊடகவியலாளர்களில் ஒருவரான விக்டர் ஐவன் 2025.01.19ஆம் திகதி காலமானார். விக்டர் ஐவன் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இந்நாட்டில் ஒரு பத்திரிகையின் ஆசிரியராகவும் மனித உரிமைகளின் காவலனாகவும் சமூக, சிவில் செயல்பாட்டாளராகவும் இருந்து நசுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக இருந்து பாடுபட்ட ஒருவராவார் .

அவர் ஜனதா, அத்த மற்றும் ராவய, யுக்திய போன்ற பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்து இந்த நாட்டில் புலனாய்வு ஊடகத்துறை மூலம் மறைப்பதற்கு அல்லது தகவல் மறுப்பதற்கு முயற்சிக்கப்பட்ட எல்லா சந்தர்ப்பங்களிலும் அவற்றை வெளிப்படுத்தியதன் மூலம் குடிமக்களின் உரிமைகளுக்காக அயராத குரலாக இருந்து வந்துள்ளார் .

ஊடகத்துறையின் குரல் வளையை நசுக்குவதற்காக ஆளும் வர்க்கம் புதிய புதிய சட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் கொண்டுவந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் அதற்கு எதிராக தைரியமாக தனித்து நின்று குரல் கொடுத்து வந்தார். அதுமட்டுமல்லாமல் சிவில் சமூகத்தையும் விழிப்படையச் செய்து அதற்கு எதிராக அணிதிரட்டியதன் மூலம் ஊடக சுதந்திரத்தை நிலைநிறுத்த பாடுபட்ட ஒருவர் ஆவார்.

நாட்டில் சட்டம், நீதி, நிருவாக இயந்திரங்கள் தவறான வழியில் பயணிக்க முயற்சி எடுத்த போதெல்லாம் அதுபற்றி தமது பேனா மூலம் தைரியமாக எடுத்துக்காட்டி எதிர்த்து போராடிய ஒருவர்.

1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமரதுங்க நீதித்துறையின் விதிமுறைகளுக்கு மாற்றமான முறையில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவை நியமித்த போது அதற்கு எதிராக தமது பத்திரிகையான ராவய பத்திரிகையில் கருப்பு பக்கம் ஒன்றை வெளியிட்டு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு இந்த நாட்டில் நீதித்துறையின் சுதந்திரத்துக்காக குரல் எழுப்பியதை உதாரணமாக குறிப்பிடலாம்.

நான் ஒரு ஊடகவியலாளர் என்ற வகையில் இந்தியாவில் வாசிக்கின்ற தமிழ் அகதிகள் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து அறிவதற்கான குழுவொன்று ஹிந்து பத்திரிகையின் ஆசிரியர் என் ராம் அவர்களின் அழைப்பின் பேரில் இந்திய சென்ற குழுவில் விக்டர் ஐவனுடன் இணைந்து பயணம் மேற்கொண்டார். இதன் மூலமும் 2001ஆம் ஆண்டு நோர்வே ஒஸ்லோவில் நடைபெற்ற விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான முதலாவது சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றிய அறிக்கை இடலுக்கும் விக்டர் ஐவனுடன் இணைந்து பங்குபற்றிய சந்தர்ப்பங்களில் அவரிடம் இருந்து நிறைய அனுபவங்களைப்பெற்றுள்ளேன்.

அத்துடன் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் பணியாற்றும் போதும் அவருடன் நேரடியாக இணைந்து செயலாற்றும் வாய்ப்பு கிடைத்ததால் அடிக்கடி ஊடக அறிவுப் பரிமாற்றத்துக்கு சந்தர்ப்பம் கிடைத்ததை மறக்க முடியாது.


ஊடக ஒழுக்க நெறிக்கோவை இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் அறிமுகம் செய்தபோது அதற்கு முதலாவதாக ஒத்துழைப்பு வழங்க முன்வந்த பத்திரிகை என்ற வகையில் ராவய பத்திரிகைக்கே தனிச் சிறப்பு உண்டு.

**1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமரதுங்க நீதித்துறையின் விதிமுறைகளுக்கு மாற்றமான முறையில் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவை நியமித்த போது அதற்கு எதிராக தமது பத்திரிகையான ராவய பத்திரிகையில் கருப்பு பக்கம் ஒன்றை வெளியிட்டு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.**

இங்கிலாந்தின் டைம்ஸ் பத்திரிகைக்கு நிகராக இலங்கையிலும் ஊடக ஓம்புட்ஸ்மான் என்று அவரது பத்திரிகையில் ஒரு பக்கத்தை முதலாவதாக ஆரம்பித்தது அது மக்கள் ஊடக பிரசுரங்கள் மற்றும் இதர பிரச்சினைகள் பற்றியும் கருத்துக்களை தைரியமாக வெளியிட சந்தர்ப்பம் வழங்கிய ராவய பத்திரிகையின் தலை சிறந்த ஆசிரியராக கடமை புரிந்த ஒருவர் விக்டர் ஐவன் ஆவார்.

அவரது புலனாய்வு ஊடக செயல்பாட்டை திறம்பட முன்னெடுக்க மிகவும் தைரியமாக பணியாற்றக்கூடிய சிறந்த ஊடகவியலாளர்கள் குலாம் ஒன்றையும் தன்னுடன் வைத்திருந்தார். அவர் உண்மைகளை ஊழல், மோசடிகளை, அதிகார துஷ்பிரயோகங்களை வெளிப் படுத்திய போதெல்லாம் தொடர்ச்சியாக ஆட்சியாளர்களிடம் இருந்து சொல்லொணா அச்சுறுத்தல்களையும் நெருக்கடிகளையும் பல முறை சந்தித்து வந்த ஒருவராவார்.

அத்துடன் அன்றைய 1970ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் அப்போதைய ஜே.வி.பியின் முன்னோடிகளில் ஒருவராகவும் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான சிறந்த ஊடக ஜாம்பவான் ஒருவரின் இழப்பு இந்த நாட்டின் ஊடகத்துறைக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.



## ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 19ஆவது ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வு



(கியாஸ் ஷாபி)

திருகோணமலையில் 2006.01.24ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 19ஆவது ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி பி.ப.2 மணியளவில் திருகோணமலை உவர்மலை லோவெர் வீதியில் அமைந்துள்ள உவர்மலை பூங்காவடியில் நடைபெறவுள்ளது.

இந்நினைவேந்தல் நிகழ்வானது வடக்கு கிழக்கு ஊடக அமைப்புக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடை பெறவுள்ளது.

எனவே இந்நினைவேந்தல் நிகழ்வில் அனைவரையும் பங்கேற்கமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுக்கின்றனர்.

## சமூக பொலிஸ் குழு உறுப்பினர்களுக்கான கூட்டம்

(பீ.எம் முக்தார்)

பேருவளை பொலிஸ் பிரிவில் உள்ள சீனன்கோட்டை அக்கரகொடை 751 கிராம அதிகாரி பிரிவைச் சேர்ந்த சமூக பொலிஸ் குழு அங்கத்தவர்களுக்கான விஷேட கூட்டமொன்று அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார விஷேட சொற்பொழிவாற்றினார். சமூக பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி விக்ரம ஆரச்சியின் வழிகாட்டலின் கீழ் இக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## வெள்ள அனர்த்தம்

### இடம்பெயர்ந்தவர்களை சந்தித்த பிரதேச செயலாளர் குழுவினர்



(பாறுக் ஷிஹான்)

தொடர் அடை மழை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தும் இரண்டாவது நாளாக தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மல்கம்பிட்டி கிராம சேவகர் பிரிவில் உள்ள 19 குடும்பங்களைச் சேர்ந்த 63 பேர் தற்காலிகமாக திங்கட்கிழமை (20) சம்மாந்துறை தாருஸ்ஸலாம் மகா வித்தியாலய இடை தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை பார்வையிட சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம் , வீரமுனை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கெப்டன் தனுக, தேசிய அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் அஸாறுடீன் சலீம், கிராம சேவகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் தொடர் அடை மழை காரணமாக சேனநாயக்கா சமுத்திரத்தின் நீர்மட்டம் உயர்வடைந்ததால் வெள்ளம் வடிந் தோடுவதற்காக வான் கதவுகள் திறந்து விடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## 10 மாத குழந்தை கொலை; தாய் கைது

(எம்.ரீ.ஆரிப்)

ஹபரணை பொலிஸ் பகுதிக்குட்பட்ட பலுகஸ்வெவயில் 10 மாத குழந்தையை கொலை செய்த சந்தேகத்தின் பேரில் தாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலனகம பலுகஸ்வெவ பகுதியில் வீடொன்றில் குழந்தை ஒன்று இறந்து விட்டதாக ஹபரணை பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பில் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்ட போது இது ஒரு கொலை என தெரியவந்துள்ளது. இந்நிலையில் குறித்த கொலை தொடர்பில் குழந்தையின் தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தினத்தன்று குழந்தையின் தந்தை வீட்டில் இல்லை எனவும் இரவு குழந்தையை வீட்டிற்கு பின்னால் உள்ள தண்ணீர் தொட்டியில் வீசி, பின்னர் குழந்தையை மீட்டு வீட்டின் கட்டிலில் வைத்ததாக தாய் வாக்குமூலம் அளித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர் புலனகம பலுகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய தாய் என பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரணை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாடு முழுவதிலும் இடம்பெற்ற வீதி விபத்துகளில் மூவர் பலி

(க.மகாதேவன்)

நாடு முழுவதிம் இடம்பெற்ற வீதி விபத்துகளில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மஹவ பொலிஸ் பிரிவின் நிகவெரடிய - சியம்பலங்கமுவ வீதியில் தலகொலவெவ பஸ் தரிப்பிடத்திற்கு அருகில், மஹவவிலிருந்து நிகவெரடிய நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வீதியின் இடதுபுறத்தில் நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதேவேளை, விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மற்றும் பின் இருக்கையில் பயணித்த பெண் பலத்த காயமடைந்தனர். மேலும் இருவரும் மஹவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்கள் 22 மற்றும் 31 வயதுடைய இபலோகம பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை, மின்னேரியா பொலிஸ் பிரிவின் ஹபரணை- பொலன்னறுவை வீதியில் மின்னேரியா இராணுவ முகாமுக்கு அருகில் சனிக்கிழமை (18) இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் இராணுவ கெப் வண்டியுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர் மின்னேரியா பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் தியபெதும பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய பொலிஸ் சார்ஜன்ட் ஆவார்.

## கற்பிட்டி இந்து இளைஞர் சேவை மன்றத்தின் தைப் பொங்கல் விழா



( எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டி இந்து இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் கற்பிட்டி ஸ்ரீ வேல் முருகன் ஆலய நிர்வாகத்தின் அனுசரணையில் ஞாயிற்றுக்கிழமை (19) ஆலயத்தில் தைப்பொங்கல் விழா நடைபெற்றது.

கற்பிட்டி இந்து இளைஞர் சேவை மன்றத்தினால் அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே கலை கலாசார விழுமியங்களை ஊக்குவிக்கும் வகையில் நடைபெற்றது.

அறநெறிப் பாடசாலை ஆசிரியைகளின் நெறிப்படுத்தலுடன் பெற்றோர்களின் பங்களிப்புகளுடன் இடம்பெற்ற தைப்பொங்கல் விழாவில் சிறப்பு பூஜையினை கற்பிட்டி ஸ்ரீவேல் முருகன் ஆலய பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ வரதேஸ்வரக் குருக்கள் நடாத்தியதுடன் ஆசியுரையினையும் நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது.




## நல்லிணக்கம், ஒற்றுமையை வளர்க்கும் கும்பமேளா

# 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பெருமிதம்

வடமாநிலங்களில் நடைபெறும் கும்பமேளா, தென் மாநிலங்களில்





நடைபெறும் புஷ்கரம் ஆகிய நிகழ்வுகள் சகோதரத்துவம், நல்லிணக்கம், ஒற்றுமையை வளர்க்கின்றன என 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பெருமிதத்துடன் தெரிவித்தார்.

மாதம்தோறும் 'மனதின் குரல்' நிகழ்ச்சியின் மூலம் வானொலி வாயிலாக நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி உரையாற்றி வருகிறார். இந்நிலையில் நேற்று முன்தினம் ஒலிபரப்பான 118ஆவது நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசுகையில் தெரிவித்தாவது:

ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிறும் 'மனதின் குரல்' நிகழ்ச்சி மூலம் உங்களை சந்தித்து வருகிறேன். இந்த மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமை குடியரசு தினம் கொண்டாடப் படுவதால் ஒரு வாரம் முன்னதாகவே உங்களுடன் பேசுகிறேன்.

இது இந்திய குடியரசின் 75ஆவது ஆண்டாகும். அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்து 75 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இந்த நேரத்தில் அம்பேத்கர், நாட்டின் முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத், மூத்த தலைவர் ஷியாம பிரசாத் முகர்ஜி ஆகியோரது வழிகாட்டுதல்களை நாம் பின்பற்றி நடக்க வேண்டும்.

அத்துடன் உத்தர பிரதேசத்தின் பிரயாக் ராஜில் மகா கும்பமேளா நடைபெற்று வருகிறது. அங்கு மக்கள் வெள்ளம் அலைமோதுகிறது. சமத்துவம், சகோதரத்து வம், ஒற்றுமையின் சங்கமமாக கும் பமேளா திகழ்கிறது. பாரத மக்கள் மட்டுமன்றி, பல்வேறு நாடுகளை சேர்ந்த மக்களும் குவிந்து வருகின்றனர். தெற்கு, கிழக்கு, மேற்கு என நாட்டின் அனைத்து திசைகளில் இருந்தும் மக்கள் வருகின் றனர். இந்த விழாவில் எங்கும், எதிலும் வேறுபாடு இல்லை, சாதிபேதம், ஏழை – பணக்காரர்கள் பேதமின்றி அனைவரும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடுகின் றனர் என்றார்.

## கொல்கத்தா பெண் மருத்துவர் கொலை வழக்கு

# குற்றவாளிக்கு சாகும்வரை சிறை தண்டனை

மருத்துவக் கல்லூரி மாணவியான (31) மருத்துவரை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்த வழக்கில்





குற்றவாளி என அறிவிக்கப்பட்ட சஞ்சய் ராய்க்கு நேற்று ஆயுள் தண்டனையும் 50,000ரூபா அபராதமும் விதித்த கொல்கத்தா நீதிமன்ற நீதிபதி அனிர்பன் தாஸ் கொலைசெய்யப்பட்ட பெண்ணின் பெற்றோருக்கு 17 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறு மேற்கு வங்க அரசுக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை கற்பழிப்பு மற்றும் கொலை தொடர்பான பிரிவுகளின் கீழ் ராய் குற்றவாளி என நீதிமன்றம் மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

இரு தொடர்பில் தெரியவருவதாவது:

பெண் மருத்துவர் கொலை வழக்கில் குற்றவாளி சஞ்சய் ராய்–க்கான தண்டனை நேற்று மதியம் 2.45 மணிக்கு அறிவிக்கப்படும் என்று கொல்கத்தா விசாரணை நீதிமன்றம் ஏலவே அறிவித்திருந்த நிலையிலேயே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்குவங்க தலைநகர் கொல்கத்தாவில் அரசு மருத்துவமனையில் இரவு கடமையில் இருந்த பெண் மருத்துவர் (31) கடந்த ஆகஸ்ட் 9ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார். அவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, கொடூரமாக கொலை செய்யப்பட்டது பிரேத பரிசோதனையில் தெரியவந்தது.

இந்த கொடூர கொலை தொடர்பில், காவல் துறையில் தன்னார்வலராக பணியாற்றிய சஞ்சய் ராய் கடந்த ஆகஸ்ட் 10ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இந்த கொலை வழக்கை முதலில் மேற்குவங்க பொலிஸார் விசாரித்தனர். மாநில பொலிஸாரின் விசாரணை குறித்து மருத்துவ மாணவர்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தவே இதை மேற்குவங்க உயர் நீதிமன்ற உத்தரவின்படி சிபிஐ–க்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கு மீதான விசாரணை கொல்கத்தா வில் உள்ள விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வழக்கில் 81 சாட்சிகள் இணைக்கப்பட்டதுடன் அக்டோபர் 7ஆம் திகதி சிபிஐ தரப்பில் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. பெண் மருத்துவர் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டிருப்பதாக மருத்துவ மாணவர்கள் குற்றம் சாட்டினர். ஆனால் சிபிஐ குற்றப்பத்திரிகையில் சஞ்சய் ராய் மட்டுமே குற்றத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது.


கடந்த 9ஆம் திகதி அனைத்து தரப்பு விசாரணைகளும் நிறைவடைந்து திகதி குறிப்பிடப்படாமல் தீர்ப்பு ஒத்திவைக் கப்பட்டது. இந்த வழக்கில் நீதிபதி அனிபர் தாஸ் கடந்த 18ஆம் திகதி தீர்ப்பினை வழங்கினார். அப்போது, சிபிஐ முன்வைத்த ஆதாரங்களின் அடிப்படையில் சஞ்சய் ராய் குற்றவாளி என தீர்ப்பளித்தார்.

தண்டனை விவரம் நேற்று திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என தெரிவித்திருந்த நிலையில் குற்றப்பிரிவுகளான 64, 66 மற்றும் 103(1) இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி. இதற்கு அதிகபட்சமாக மரண தண்டனையும், குறைந்தபட்சமாக ஆயுள் தண்டனையும் இருக்கும்" என்று நீதிபதி கூறினார். இந்நிலையில் நேற்று மீண்டும் இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி, பிற்பகல் 2.45 மணிக்கு சஞ்சய் ராய்க்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மகா கும்பமேளாவில்:

# வைரலாகும் உத்தரகண்ட் இளம் துறவி ஹர்சா

மகா கும்பமேளாவில் ருத்ராட்ச மாலைகளை விற்கும் இரு



இளம்பெண்களின் புகைப்படம், வீடியோக்கள் வைரலாக பரவி வருகின்றன. லியானார்டோ டாவின்சி வரைந்த மோனா லிசா ஓவியம், உலகின் புகழ்பெற்ற ஓவியங்களில் ஒன்றாகும். இந்த ஓவியத்தை மையமாக வைத்து அழகான இளம்பெண்களை, மோனா லிசா என்று அழைப்பது வழக்கமாக இருந்து வருகிறது.

தற்போது உத்தர பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெறும் மகாகும்பமேளாவில் ருத்ராட்ச மாலைகளை விற்கும் இரு இளம்பெண்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்து வருகின்றனர். அவர்களின் புகைப்படம் மற்றும் காணொளிகள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகின்றன. இருவருமே மத்திய பிரதேசத்தின் இந்தூரை சேர்ந்தவர்களாகும்.

குடும்ப வறுமை காரணமாக பாடசாலைப் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு ருத்ராட்ச மாலைகளை விற்கும் தொழிலில் ஈடுபட்டுவரும் அவர்களின் உண்மையான பெயர்கள் தெரியாத நிலையில், இருவரும் மகா கும்பமேளாவின் மோனா லிசாக்கள் என்று வர்ணிக்கப்படுகின்றனர்.

இதில் ஒரு பெண் கூறும்போது, "தினமும் ரூ.3,000–க்கு ருத்ராட்ச மாலைகளை விற்பனை செய்து வருகிறேன். என்னிடம் ரூ.50,000 மதிப்புள்ள மாலைகள் உள்ளன. இவை அனைத்தையும் மகா கும்ப மேளாவில் விற்க திட்டமிட்டு உள்ளேன். இதன்மூலம் ரூ.1.5 இலட்சம் வரை வருவாய் கிடைக்கும்" என்று தெரிவித்தார்.

# திருப்பதியில் சொர்க்கவாசல் திறப்பு நிகழ்வில்

## 6.80 இலட்சம் பக்தர்கள் தரிசனம்

திருப்பதியில் கடந்த 10 நாட்களாக நடைபெற்றுவந்த சொர்க்கவாசல் திறப்பு நிகழ்வில் 6.80 இலட்சம் பக்தர்கள் தரிசனம் செய்துள்ள அதேவோளை ரூ.30.75 கோடியை காணிக்கையாகச் செலுத்தியுள்ளதாகவும், தேவஸ்தானம் அடைக்கப்பட்டுள்ளதாகவும் திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் தெரிவித்துள்ளது.



திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வைகுண்ட ஏகாதசியையொட்டி கோவில் முழுவதும் வண்ண மின் விளக்குகள் கொண்டு அலங்காரம் செய்யப்பட்டு மின்னொளியில் ஜொலித்தது. மேலும் பல்வேறு மாநிலங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட 10 தொன் மலர்கள், பல வகையான பழங்கள் கொண்டு கோவில் வெளிப்புறம், உள்புறம் மற்றும் கொடிமரம், பலிபீடம், வைகுண்ட வாசல் உள்ளிட்ட இடங்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கடந்த 10 நாட்களாக நடைபெற்றுவந்த சொர்க்கவாசல் திறப்பு நிகழ்வில் 6.80 இலட்சம் பக்தர்கள் தரிசனம் செய்துள்ளனர்.

# சபரிமலை கோயிலில் மண்டல, மகரவிளக்கு காலம் நிறைவு

## நடை சாத்தப்பட்டது

மண்டல, மகரவிளக்கு கால பூஜைகளுக்குப் பின்னர் சபரிமலை ஐயப்பன் கோயில் நடை நேற்று காலை சாத்தப்பட்டது. மண்டல, மகரவிளக்கு கால பூஜைகளுக்காக சபரிமலை ஐயப்பன் கோயில் நடை கடந்த நவம்பர் 15ஆம் திகதி மாலை 4 மணிக்கு திறக்கப்பட்டது.

மறுநாள் (16ஆம் திகதி) தொடங்கிய மண்டல கால பூஜைகள் டிசம்பர் 26ஆம் திகதி நடைபெற்ற பிரசித்தி பெற்ற மண்டல பூஜையுடன் நிறைவடைந்தது. 3 நாட்களுக் குப் பின்னர் மகரவிளக்கு கால பூஜைகளுக்காக சபரிமலை கோயில் நடை டிசம்பர் 30ஆம் திகதி மாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. மறுநாள் (31ஆம் திகதி) முதல் மகரவிளக்கு கால பூஜைகள் ஆரம்பமாகின.



அத்துடன் கடந்த 14ஆம் திகதி மகரவிளக்கு பூஜையும், மகரஜோதி தரிசனமும் நடைபெற்று நடை சாத்தப்பட்டது.

## கேரளாவை உலுக்கிய கொலை வழக்கு:

# காதலி கிரீஷ்மாவுக்கு தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பு

கேரள மாநிலம் பாறசாலையை சேர்ந்தவர் ஷாரோன்ராஜ் (வயது 23). இவர் கடந்த 2022ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தனது காதலியான குமரி மாவட்டத்தைச் சேர்ந்த கிரீஷ்மா (24) என்ற இளம்பெண்ணால் விஷம் கொடுத்து கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் கிரீஷ்மா மற்றும் அவருக்கு உடைந்தையாக செயல்பட்ட அவரது தாய்மாமா நிர்மல்குமார் ஆகியோரை குற்றவாளிகளாக நெய்யாற்றின்கரை நீதிமன்றம் கடந்த 17ஆம் திகதி அறிவித்தது.

இந்நிலையில் தண்டனை விவரம் நேற்று முன் தினம் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் குற்றவாளிகளான இருவருரையும் பொலிசார் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மீண்டும் ஆஜர்படுத்தினர். அப்போது நீதிபதி, கிரீஷ்மாவிடம் ஏதாவது கூற விரும்புகிறீர்களா? என கேட்டபோது, கிரீஷ்மா நீதிபதியிடம் ஒரு கடிதத்தை கொடுத்தார். அந்த கடிதத்தில், "எனக்கு தற்போது 24 வயது ஆகிறது. ஆங்கில இலக்கியத்தில் முதுகலை பட்டப்படிப்பு முடித்துள்ளேன். மேலும் படிக்க விரும்புகிறேன். எனது பெற்றோருக்கு நான் ஒரே மகள். எனவே குறைந்த பட்ச தண்டனை வழங்க கேட்டு கொள்கிறேன்" என்று கூறப்பட்டிருந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அரசு தரப்பு வழக்கறிஞர், வாதிட்டார். இருதரப்பு



வாதங்களையும் கேட்ட நீதிபதி, காதலனை கொன்ற வழக்கில் முதன்மை குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருந்த காதலி கிரீஷ்மாவுக்கு தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

## பதறவைக்கும் 18 கொலைகள்:

# டில்லியை உறையவைத்த தொடர் கொலையாளி கைது

ஒரு வருடமாக பிடிபடாமல் தப்பித்து வந்த "புட்சர் ஒஃப் டில்லி" என அழைக்கப்படும் தொடர் கொலையாளியை (சீரியல் கில்லர்) டில்லி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்டவர் சந்திரகாந்த் ஜா (57). பழைய டில்லி புகையிரத நிலையத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார். பீகாரின் மாதேபுரா பகுதியைச் சேர்ந்த சந்திரகாந்த், டில்லியின் அலிபூரில் வசித்து வந்தார். இவர் இதுவரை 18 கொடூரமான கொலைகளை புரிந்துள்ளார்.

பெரும்பாலும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை குறிவைக்கும் மேற்படி தொடர் கொலையாளி அவர்களுடன் நட்பாக பழகி பின்னர் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நன்சாகூ (nunchaku) எனப்படும் ஒருவகை ஆயுதத்தை பயன்ப டுத்தி கழுத்தை நெரித்து கொலை செய்வதுடன் அவர்களின் உடல்களை துண்டு துண்டாக வெட்டி, பைகளில் அடைத்து, பொலிஸாரை கிண்டலடித்து கையால் எழுதப்பட்ட குறிப்புகளுடன் அவற்றை திகார் சிறைக்கு அருகே விட்டுச் செல்வாராம். 1998 ஆம் ஆண்டு



டில்லி, ஆதர்ஷ் நகரில் ஔரங்கசீப் என்பவரை கொலை செய்ததில் இருந்து சந்திரகாந்த் ஜாவின் சீரியல் கொலைகள் ஆரம்பமானதாக கூறப்படுகின்றது . இந்நிலையில் சில மாதங்களுக்குப் பின்னர் கைதான இவர் கடந்த 2002 இல் விடுதலைசெய்யப்பட்டார். அதன் பின்னர் அவர் பீகாரில் இருந்து டில்லிக்கு வந்த தனது நண்பர் உட்பட 18 பேரைக் கொலை செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உலக வலம் WORLD NEWS

பா. கிருஷிகா

# பலஸ்தீனிய கைதிகளை விடுவித்தது இஸ்ரேல்





காஸா பகுதியில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட போர் நிறுத்தம் ஞாயிற்றுக்கிழமை அமுலுக்கு வந்த நிலையில், திங்கட்கிழமை (20) அதிகாலை 90 பலஸ்தீனிய கைதிகளை இஸ்ரேல் விடுவித்தது.

காஸாவில் ஹமாஸ் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட மூன்று இஸ்ரேலிய பணயக்கைதிகள் இஸ்ரேலுக்குத் திரும்பிய சில மணிநேரங்களுக்குப் பின்னர் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்நாட்டு நேரப்படி திங்கட்கிழமை அதிகாலை 1 மணியளவில் 90 பலஸ்தீனிய கைதிகளை ஏற்றிக்கொண்டு செஞ்சிலுவைச் சங்க பஸ்கள் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள ரமல்லாவை வந்தடைந்தன.

இஸ்ரேலியப் படைகள் கொண்டாட்டங்கள் அனுமதிக் கப்படாது என்று எச்சரித்த போதிலும் கைதிகள் மேற்குக் கரைக்கு திரும்பியபோது, ஏராளமான உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். விடுவிக்கப்பட்ட பலஸ்தீனியர்களில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை மற்றும் ஜெருசலேமைச் சேர்ந்த 69 பெண்கள் மற்றும் 21 பதின்ம இளைஞர்கள் மற்றும் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அடங்குவர். 2024 மார்ச் மாதத்தில் இஸ்ரேலில் சிறையில் அடைக்கப்பட்ட பலஸ்தீனிய பத்திரிகையாளர் புஷ்ரா அல்–தவில் திங்கட்கிழமையன்று விடுவிக்கப்பட்ட கைதிகளில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ராகுல் காந்தி மீதான அவதூறு வழக்கு விசாரணைக்கு தடை உத்தரவு

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கு எதிரான அவதூறு வழக்கின் விசாரணைக்கு இந்திய உயர் நீதிமன்றம் தடை விதித்து திங்கட்கிழமை (20) உத்தரவிட்டுள்ளது.

2019 மக்களவைத் தேர்தல் பிரசாரத்தின்போது, உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கொலைக் குற்றவாளி என ராகுல் காந்தி விமர்சித்திருந்தார்.

ராகுல் காந்தியின் இந்தக் கருத்துக்கு எதிராக ஜார்க்கண்ட் மேல் நீதிமன்றில் பா.ஜ.க தொண்டர் நவீன் ஜா என்பவர் மீது வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில், ஜார்க்கண்ட் மேல் நீதிமன்றில் நடைபெறும் விசாரணையை தடைசெய்யக் கோரியும், வழக்கை தள்ளுபடி செய்யக் கோரியும் ராகுல் காந்தி தரப்பில் உயர் நீதிமன்றில் முறையிடப்பட்டது.

இந்த வழக்கில், பாதிக்கப்பட்டவர் அல்லாத ஒருவர் எப்படி புகார் அளிக்க முடியும் என ராகுல் காந்தி தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மறு உத்தரவு பிறப்பிக்கும் வரை ராகுல் காந்தி மீதான அவதூறு வழக்கை விசாரிக்கக் கூடாது என விசாரணை நீதிமன்றத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



## பெண்கள், சிறுமிகள் மீதான கல்வித் தடையை நீக்குமாறு வெளிவிவகார அமைச்சு வலியுறுத்தல்

ஆப்கானிஸ்தான் பெண்கள் மற்றும் சிறுமிகள் மீதான கல்வித் தடைகளை இரத்து செய்யுமாறு வெளிவிவகார அமைச்சின் அரசியல் துணைத்தலைவர் ஷெர் அப்பாஸ் ஸ்டானிக்சாய், தென்கிழக்கு கோஸ்ட் மாகாணத்தில் சனிக்கிழமை ஆற்றிய உரையில் இதனைத் தெரிவித்தார்.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு கல்வியை மறுக்க எந்த காரணமும் இல்லை என்று ஒரு மதப் பள்ளி விழாவில் பார்வையாளர்களிடம் "கடந்த காலத்தில் பெண்கல்வித்தடைக்கு எந்த நியாயமும் இல்லை, இருக்கவும் கூடாது" என அவர் தெரிவித்தார். ஆறாம் வகுப்புக்குப் பிறகு பெண்கள் கல்வி கற்க அரசு தடை விதித்துள்ளது. கடந்த செப்டெம்பரில், பெண்களுக்கான மருத்துவப் பயிற்சி மற்றும் படிப்புகளையும் அதிகாரிகள் நிறுத்தியதாக செய்திகள் வெளிவந்தன. ஆப்கானிஸ்தானில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு பெண் மருத்துவர்கள் மற்றும் சுகாதார நிபுணர்கள் மட்டுமே சிகிச்சை அளிக்க முடியும். மருத்துவப் பயிற்சி தடையை அதிகாரிகள் இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

"கல்வியின் கதவுகளைத் திறக்க நாங்கள் மீண்டும் தலைமைக்கு அழைப்பு விடுக்கிறோம்" என ஸ்டானிக்சாய் சமூக வலைத்தளமான எக்ஸில் பகிர்ந்துள்ள வீடியோவில் தெரிவித்தார். "நாங்கள் 40 மில்லியன் மக்கள்தொகையில் 20 மில்லியன் மக்களுக்கு எதிராக அநீதி இழைக்கிறோம். அவர்களின் அனைத்து உரிமைகளும் இஸ்லாமிய சட்டத்தில் இல்லை, ஆனால் நமது தனிப்பட்ட விருப்பம் அல்லது இயல்பின் அடிப்படையில் தவறிழைக்கப்படுவதாக" தெரிவித்தார்.

பெண்கள் கல்வி கற்க தகுதியுடையவர்கள் என்று அவர் சொல்வது இது முதல் முறையல்ல. 2022 செப்டம்பரில், பெண்களுக்கு பாடசாலைகள் மூடப்பட்டு ஒரு வருடத்திற்குப் பிறகும், பல்கலைக்கழகத் தடை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பும் அவர் இதே போன்ற கருத்துக்களைத் தெரிவித்தார். ஆனால் சமீபத்திய கருத்துக்கள் கொள்கையில் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கான தலைவர் ஹிபத்துல்லா அகுந்த்சாதாவிடம் நேரடி வேண்டுகோள் விடுத்த முதல் அழைப்பு இதுவாகும்.

க்ரைசிஸ் குழுமத்தின் தெற்காசிய திட்டத்தின் ஆய்வாளர் இப்ராஹீம் பாஹிஸ், பெண் கல்வி என்பது அனைத்து ஆப்கானிஸ்தான் பெண்களின் உரிமை என ஸ்டானிக்சாய் அவ்வப்போது அறிக்கைகளை வெளியிட்டார். இருப்பினும், இந்த சமீபத்திய அறிக்கை அவர் கொள்கை மாற்றத்திற்கு பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறார் மற்றும் தற்போதைய அணுகுமுறையின் நியாயத்தன்மையை கேள்விக்குள்ளாக்குகிறார்" என தெரிவிக்கிரது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில், அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மலாலா யூசுப்சாய், பெண்கள் மற்றும் பெண் கல்வியில் தலிபான்களுக்கு சவால் விடுமாறு முஸ்லிம் தலைவர்களை வலியுறுத்தினார். இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு மற்றும் முஸ்லிம் உலக லீக் நடத்திய மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

பெண் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான தடைகள் நடைமுறையில் இருக்கும் நிலையில், ஆண் பாதுகாவலர் இல்லாமல் பெண்கள் பொது வெளியில் செல்ல முடியாது என்ற நிலையில், அங்கீகாரம் பெறுவது கிட்டத்தட்ட சாத்தியமற்றது என ஐ.நா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தானின் சட்டபூர்வமான ஆட்சியாளர்களாக தலிபான்களை எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை, ஆனால் ரஷ்யா போன்ற நாடுகள் அவர்களுடன் உறவுகளை வளர்த்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



## கொலம்பியாவில் வன்முறை 80 பேர் உயிரிழப்பு

கொலம்பியாவில் அமைதியின்மை சீர்குலைந்த நிலையில், வெடித்த புதிய வன்முறையால் கடந்த நான்கு நாட்களில் பொதுமக்கள் உட்பட 80 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும், ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை (19) தெரிவித்தனர்.

தேசிய விடுதலை இராணுவம் (ELN) மற்றும் கொலம்பியாவின் புரட்சிகர ஆயுதப் படைகளின் (Farc) அதிருப்தி பிரிவுகளுக்கு இடையேயான வன்முறை வெனிசுலாவின் எல்லையில் உள்ள பகுதியில் வியாழன் முதல் வேகமாக அதிகரித்தது. இதனால், குறைந்தது 5,000 பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற கட்டாயப்படுத்தப்பட்டனர்.

தங்கள் வீடுகளை விட்டு வெளியேறும் குடும்பங்களுக்கு பாடசாலை கட்டிடங்கள் அவசரகால தங்குமிடங்களாக மாற்றப்பட்டுள்ளதால் கல்வி நடவடிக்கைகள் காலவரையின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளது. மேலும் இப்பகுதி அவசர மனிதாபிமான உதவியைக் கோரியுள்ளது என நோர்டேடி சாண்டாண்டர் பிராந்தியத்தின் ஆளுநர் வில்லியம் வில்லமிசார் தெரிவித்தார்.

கொலம்பியாவின் ஓம்புட்ஸ்மன் அலுவலகத்தின்படி, நூற்றுக்கணக்கான பொதுமக்கள் காயமடைந்துள்ளதுடன் 10 பெண்கள் உட்பட 20 பேர் கடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. திபு நகராட்சியில் குறைந்தது 3,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று உள்ளூர் மேயர் ரிச்சார் கிளாரோ தெரிவித்தார்.



## காஸாவை புனரமைக்க 350 ஆண்டுகள் தேவை: ஐநா தெரிவிப்பு



காஸாவில் புனரமைப்பு பணிகளை நடத்தி முடிக்க 350 ஆண்டுகளுக்கு மேல் ஆகலாம் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

அக்டோபர் 7, 2023 அன்று ஹமாஸ் போராளிகள் தெற்கு இஸ்ரேலைத் தாக்கியதில் இருந்து காஸாவில் போர் ஆரம்பித்தது, இஸ்ரேலில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர். 250 பேர் கடத்தப்பட்டனர். சுமார் 100 பணயக்கைதிகள் இன்னும் காஸாவிற்குள் உள்ளனர், அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இறந்துவிட்டதாக நம்பப்படுகிறது.

இஸ்ரேலின் தாக்குதலால் காஸா வில் 46,000இற்கும் அதிகமான பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர், அவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என ஐ.நா. தெரிவித்துள்ளது. 110,000இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் காயமடைந்துள்ளனர். 17,000 இற்கும் மேற்பட்ட போராளிகளைக் கொன்றதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவிக்கிறது. ஆனால் அதற்கான ஆதாரத்தை அதனால் தர முடியவில்லை. இஸ்ரேலிய இராணுவத்தின் தொடர் குண்டுவீச்சுகள் காஸாவின் பெரும்பகுதியை தரைமட்டமாக்கியுள்ளது. காஸாவில் இருந்த 23 இலட்சம் மக்களில் 19 இலட்சம் மக்களை இடம்பெயர்ந்துள்ளனர்.

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் ஞாயிற்றுக்கிழமை முழுமையாக நடைமுறைக்கு வந்தது. முதற்கட்டமாக இஸ்ரேலிய பணய கைதிகள் மூவரை ஹமாஸும், பலஸ்தீனிய கைதிகள் 90 பேரை இஸ்ரேலும் விடுவித்தது. போர் நிறுத்தம் ஆரம்பித்துள்ள நிலையில் காஸாவில் தாங்கள் கைவிட்டுச் சென்ற வீடுகளை நோக்கி மக்கள் மீண்டும் வர ஆரம்பித்துள்ளனர். 15 மாதங்களாக வெளியேற்றப்பட்டு சொந்த நாட்டில் அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்த காஸா மக்கள் கல்லாகவும் மண்ணாகவும் எஞ்சிய கட்டடங்களை கடந்து சிதிலங்களுக்கு ஊடாக தங்கள் வீடுகளின் எச்சங்களுக்குத் திரும்ப ஆரம்பித்துள்ளனர்.

தெருக்களை சுத்தம் செய்து தங்கள் வாழ்வை மீண்டும் கட்டமைக்கும் முயற்சியை நம்பிக்கையுடன் ஆரம்பித்துள்ளனர். ஆனால் சேதங்கள் சரிசெய்யப்பட்டு காஸாவில் மீண்டும் இயல்வு வாழ்க்கை திருப்புவது அவ்வளவு எளிதானது அல்ல என்பதே துரதிஷ்டவசமான உண்மை. செயற்கைக்கோள் தரவுகளைப் பயன்படுத்தி, ஐக்கிய நாடுகள் சபை கடந்த மாதம் வெளியிட்ட தரவின்படி, காஸாவில் உள்ள 69% கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளன. சுமார் 245,000 வீடுகள் உட்பட பல கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன என ஐ.நா மதிப்பிட்டுள்ளது. 100இற்கும் மேற்பட்ட லொறிகள் முழுநேர வேலை செய்தாலும், இடிபாடுகளை அகற்ற 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகும் என தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் நம்பிக்கை மிகுந்த ஒரு பலஸ்தீனியர், "நாங்கள் இனியும் ஒரு கூடாரத்தில் இருக்கலாம், ஆனால் வித்தியாசம் என்னவென்றால், இரத்தக்களரி நின்றுவிடும், பயம் அகன்றுவிடும், நாங்கள் நிம்மதியாக தூங்குவோம் என்பது ஒன்றே காஸா மக்களுக்கு ஆறுதலாக அமைத்துள்ளது" என தெரிவித்தார்.




# காயத்திலிருந்து மீளாத முகமது ஷமி



முகமது ஷமி நீண்ட இடைவெளிக்கு பின் இந்திய அணிக்கு திரும்பி விட்ட நிலையில் முதல் நாள் பயிற்சியின் போது தனது இடது முழங்காலில் கட்டு கட்டிய நிலையில் பந்து வீசினார். அவர் தனது பழைய போலிங் திறனை வெளிப்படுத்த முடியாமல் சில மணி நேரம் திணறினார். மேலும் வலைப் பயிற்சி முடிந்து மைதானத்தை விட்டு வெளியே சென்ற போது அவர் இயல்பாக நடந்து செல்லவில்லை.

இந்திய கிரிக்கெட் அணி கடந்த சில ஆண்டுகளாக சர்வதேச அளவில் ஆதிக்கம் செலுத்துவதற்கு வேகப் பந்துவீச்சு முக்கியமான காரணமாக இருந்து வருகிறது. பும்ரா வேகப் பந்துவீச்சின் தூணாக இருக்கும் நிலையில், முகமது ஷமியும் முக்கிய காரணமாக இருந்து வருகிறார்.

முகமது ஷமி கடந்த ஒன்றரை ஆண்டுகளாக காயத்திலிருந்து மீண்டு வந்து கொண்டு இருந்ததால் சர்வதேச போட்டிகளில் விளையாட முடியவில்லை. நீண்ட இடைவெளிக்கு பின் அவர் 2025 சம்பியன்ஸ் கிண்ண தொடரில் பங்கேற்க இருக்கிறார். அதற்கு முன் சர்வதேச போட்டிகளில் பங்கேற்று பயிற்சி பெறும் வகையில் இங்கிலாந்து அணிக்கு எதிரான டி20 தொடரிலும் ஒரு நாள் தொடரிலும் அவர் பங்கேற்க இருக்கிறார். இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் ரி20 போட்டி நாளை மறுதினம் 22 அன்று தொடங்க உள்ளது. அதற்கு முன் இந்திய அணி வலைப்பயிற்சியில் ஈடுபட்டு இருந்தது. அப்போது முகமது ஷமி முதல் முறையாக இந்திய அணியுடன் இணைந்து பந்து வீசி பயிற்சி செய்தார்.

வலை பயிற்சியில் அவர் முதலில் எடுத்தவுடன் அதிவேகத்தில் ஓடி வந்து வீசவில்லை. அவரது இடது முழங்காலில் அடிக்கடி வீக்கம் ஏற்படுவதால் அதை பிஸியோதெரபிஸ்ட் அறிவுரையின்படி துணி வைத்து கட்டி இருந்தார். மேலும். நிதானமாகவே ஓடிவந்து பந்து வீசினார். இடையே அவரது வேகம் சற்று அதிகரித்த போதும் துருவ் ஜுரெல், சஞ்சு சாம்சன் மற்றும் அபிஷேக் சர்மா ஆகியோர் ஷமியின் போலிங்கில் எளிதாக ஷாட்களை அடித்தனர்.

பின்னர் சில நிமிடங்கள் ஓய்வுக்கு பின் மீண்டும் முகமது ஷமி போலிங் செய்தார். அப்போது தனது முந்தைய வேகத்தை அவர் மீட்டு எடுத்தார். அவர் வீசிய பந்துகளில் திலக் வர்மா சில முறை ஆட்டம் இழந்தார். இது மட்டுமே முகமது ஷமியின் முதல் நாள் வலைப் பயிற்சியில் நல்ல விஷயமாக அமைந்தது.

அதன் பின் வலைப் பயிற்சி முடிந்து அவர் வெளியேறிய போது இயல்பாக நடந்து செல்லவில்லை. அவரது இடது முழங்காலை அவர் அதிகமாக ஊன்றவில்லை. அவரால் இங்கிலாந்து ரி20 தொடரில் எந்த காயமும் இன்றி முழு வீச்சில் பந்து வீச முடியுமா? அடுத்து சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் வரை அவரால் தாக்கு பிடிக்க முடியுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

# கோ கோ உலகக் கிண்ணம் இந்தியாவுக்கு



கோ கோ உலகக் கிண்ணம் இறுதிப்போட்டி தலைநகர் டில்லியில் உள்ள இந்திராகாந்தி விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் இந்திய அணிகள் அணி மற்றும் பெண்கள் அணி சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது.

கோ கோ உலகக் கிண்ணத்தை வென்றுள்ள இந்திய அணிக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துகள் குவிந்து வருகிறது.

இந்நிலையில், இந்திய அணிக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, பிரதமர் மோடி எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், அசாத்திய திறமை, உறுதி மற்றும் குழுவாக செயல்பட்டு இந்த வரலாற்று வெற்றியைப் பதிவுசெய்த இந்திய மகளிர் அணிக்கு வாழ்த்துக்கள். இந்தியாவின் பழமையான பாரம்பரிய விளையாட்டை, இந்த வெற்றி வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது. நாட்டில் உள்ள கணக்கிட முடியாத இளம் விளையாட்டு வீரர்களுக்கு இது உந்துதலாக இருக்கும் என பதிவிட்டுள்ளார்.

# பாகிஸ்தான் அணி 127 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி


முல்தான் டெஸ்டில் பாகிஸ்தான் அணி 127 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவுகள் அணியை வீழ்த்தியது. பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்சில் 230 ஓட்டங்கள் எடுத்தது. ஷகீல் 84 ஓட்டங்களும், ரிஸ்வான் 71 ஓட்டங்களும் எடுத்தனர். ஜேடன் சீல்ஸ் மற்றும் வாரிகன் தலா 3 விக்கெட்டுகளும், சின்கிளைர் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். பின்னர் முதல் இன்னிங்சை ஆடிய மேற்கிந்திய தீவுகள் 137 ஓட்டங்களுக்கு சுருண்டது. நோமன் அலி 5 விக்கெட்டுகளும், சஜித் கான் 4 விக்கெட்டுகளும் கைப்பற்றினர். அதனைத் தொடர்ந்து, பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்சில் ஜோமெல் வாரிகனின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 157 ஓட்டங்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதனால் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு 251 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி சஜித் கானின் பந்துவீச்சில் விக்கெட்டுகளை இழந்தது. ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் அலிக் அதனசி அதிரடியாக ஓட்டங்களை எடுத்தார். வெற்றிக்காக அவர் போராடினாலும், அப்ரர் அஹ்மது பந்துவீச்சில் ஏனைய வீரர்கள் விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். 55 ஓட்டங்கள் எடுத்த அதனசி 9வது விக்கெட்டாக வெளியேற, மேற்கிந்திய தீவுகள் அணி 123 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.








# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: காலிறுதிக்கு முன்னேறிய ஸ்வரேவ், படோசா




ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்பொர்னில் நடந்து வருகின்றன. தற்போது 4ஆவது சுற்று போட்டி நடைபெறுகிறது. இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நம்பர் 2 வீரரும், ஜெர்மனியைச் சேர்ந்தவருமான அலெக்சாண்டர் ஸ்வரேவ், பிரான்சின் ஹ்யூகோ ஹம்பர்ட் உடன் மோதினார். இதில் முதல் செட்டை 6-1 என கைப்பற்றிய ஸ்வரேவ் இரண்டாவது செட்டை 2-6 என இழந்தார். இதில் சுதாரித்துக் கொண்ட ஸ்வரேவ் அடுத்த இரு செட்களை 6-3, 6-2 என வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

இதேபோல், பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீராங்கனை பவுலா படோசா 6-1, 7-6 (7-2) என்ற செட் கணக்கில் செர்பிய வீராங்கனை ஒல்காவை வென்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

# விமானப்படை தளபதி கிண்ண கோல்ஃப் போட்டி வெற்றிவிழா





இலங்கை விமானப்படை மற்றும் ஈகிள்ஸ் கோல்ஃப் லிங்க்ஸ் இணைந்து 12ஆவது முறையாக ஏற்பாடு செய்த ஏர் கமாண்டர்ஸ் கோப்பை கோல்ஃப் போட்டியின் வெற்றியாளர்களுக்கான விருது வழங்கும் விழா, சீனக்குடாவில் உள்ள ஈகிள்ஸ் கோல்ஃப் லிங்க்ஸில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா தலைமையில் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவின் பங்கேற்புடன். நடைபெற்றது.

இங்கு, விமானப்படை தளபதி கோப்பைக்காக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் போட்டியிட்டனர், மேலும் ஈகிள்ஸ் சேலஞ்ச் கோப்பைக்காக முப்படையை சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் போட்டியிட்டனர். இந்த போட்டியில் 120 இற்கும் மேற்பட்ட உள்ளூர் மற்றும் சர்வதேச கோல்ஃப் வீரர்கள் பங்கேற்றனர். இந்த ஆண்டு விமானப்படை தளபதி கோப்பை கோல்ஃப் போட்டியில் ஓய்வுபெற்ற விங் கமாண்டர் லக்மல் குணவர்தன ஆண்கள் சாம்பியன்ஷிப்பை வென்றார், அதே நேரத்தில் மூத்த வீராங்கனை பிரவீனா துனுவில பெண்கள் சாம்பியன்ஷிப்பை வென்றார். ஈகிள்ஸ் சேலஞ்ச் கோப்பையை இலங்கை விமானப்படையின் குரூப் கேப்டன் கிருஷாந்த பெர்னாண்டோ வென்றார், அதே நேரத்தில் பெண்கள் சாம்பியன்ஷிப்பை விங் கமாண்டர் லட்சுமி கொட்டுவேகெதர வென்றார்.

இந்த ஆண்டும் விமானப்படை தளபதி கிண்ண கோல்ஃப் போட்டியின் பிரதான அனுசரணையை டயலொக் எண்டர்பிரைசஸ் வழங்கியது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 21ம் திகதி செவ்வாய்க்கிழமை தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.